தாகுரின்
நகைச்சுவை நாடகங்கள்

(ஹாஸ்ய கௌதுகம்)

எழுதியவர் :
மகாகவி
ரவீந்திரநாத தாகுர்.

வங்க மூலத்தினின்று
தமிழாக்கம் :
த. நா. குமாரஸ்வாமி.

அருணோதயம்
ராயப்பேட்டை :: சென்னை-14.

PUBLISHED ON THE OCCASION OF TAGORE'S CENTENARY

First Edition 5000 Copies
February 1961
Tamil

Tagorin Nagaichuvai Natakangal

Tamil Translation of the Bengali Title:
HASYA KAUTHUK

By

RABINDRANATH TAGORE

Translator:

T. N. KUMARASAMY

Price Rs. 0-95

Published under the auspices of
The Southern Languages Book Trust, Madras.
SECOND SERIES: TAMIL 2

ARUNOTHAYAM

ROYAPETTAI :: MADRAS-14.

அணிந்துரை

சி. சுப்பிரமணியம்


சென்னை நிதி, கல்வி அமைச்சர்

மொழி, நாகரிகம், கலை முதலியவற்றில் பெரிதும் ஒற்றுமையுடையவர்கள் தென் பகுதி மக்கள். சரித்திர காலத்திற்கு முன்பிருந்தே இவ்வொருமைப்பாடு வேரூன்றி இருந்தது. ஆனால், சில நூற்றாண்டுகளுக்கு முன்னால் இவ்வொற்றுமை உணர்ச்சி குறைந்து போய்விட்டது. காலம் செய்த இவ்விடையூற்றை நீக்கி, தென் பகுதி மக்களிடையே ஒரு பகுதியினரின் கருத்துக்கள் மற்றப் பகுதியினருக்கும் பரவும் வகையில் தென்மொழிகள் புத்தக டிரஸ்ட் பாடுபட்டு வருவதைக் கண்டு நான் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன்.

1955ல் சென்னையில் நமது நாட்டின் தலைமை அமைச்சர் ஸ்ரீ ஜவகர்லால் நேரு அவர்களால் ஆரம்பிக்கப்பட்ட டிரஸ்ட் நாள்தோறும் நல்ல முறையில் முன்னேறி வருவது மிகவும் பாராட்டுதற்குரியது. இந்நிறுவனம் குழந்தைகள் முதற் கொண்டு பெரியவர்கள் வரை எல்லோருக்கும் பயன்படும் வகையிலே பல புத்தகங்களை வெளியிட்டிருக்கின்றது. குறிப் பாகத் திருக்குறள் போன்ற நூலை, கன்னடத்தில் மொழி பெயர்த்து வெளியிட்டிருப்பது மிகவும் போற்றுதற்குரியது.

கருத்துப் பரிமாற்றத்தில்தான் மனித இனத்தின் அறிவு வளர்ச்சியும் உலக அமைதியும் அடங்கியிருக்கின்றன. இவ்வுண்மையை அடிப்படையாகக் கொண்டு தென் பகுதியிலே உள்ள சிறந்த நூல்களைக் குறைந்த விலையிலே மற்ற மொழியாளரும் அறிந்து கொள்ளும் வகையிலே ஆக்கப் பணி புரியும் டிரஸ்டின் சேவை மேலும் மேலும் வளர்ந்து பயன் படும் என நினைக்கிறேன். புத்தகங்கள் வெளியிடுவதோடு மட்டுமல்லாது கருத்து அரங்கிற்கு ஏற்பாடு செய்வதிலும், ஆராய்ச்சி வேலைகளிலும் இப்புத்தக டிரஸ்ட் ஈடுபட்டிருப்பது மிகவும் மகிழ்ச்சிக்குரியது. குறிப்பாக, குழந்தைகளின் புத்தகம் படிக்கும் பழக்கத்தைப் பற்றி அவர்கள் ஆராய்ச்சி நடத்தியிருப்பது நாட்டிற்கு மிகவும் நன்மை பயக்கும் என்று எண்ணுகிறேன். புதிதாக அவர்கள் தமிழில் வெளியிட இருக்கும் நூல்கள் தமிழ்ப் பெருமக்களிடையே பெரும் ஆதரவோடு திகழும் என்று எண்ணுகிறேன்.

இத்துறையில் அவர்கள் மேலும் மேலும் சிறந்த நூல்களை எளிய விலையில் வெளியிட்டுத் தென்பகுதி மக்களுக்கும், நாடு முழுமைக்கும் பயன்படும் வகையில் முன்னேற இறைவன் அருள்வானாக.



உள்ளுறை

			பக்கம்
1.	பரீட்சை	(சாத்ரேர் பரீக்ஷா)	1
2.	வயிறும் முதுகும்	(பேடே ஓ பிடே)	5
3.	வரவேற்பு	(அப்யர்த்தனு)	11
4.	நல்லமருந்து	(ரோகேர் சிகித்ஸா)	16
5.	ஆழ்ந்த யோசனை	(சிந்தா சீல)	23
6.	இல்லாத குறை	(பாவ ஓ அபாவ)	28
7.	நோயாளியின் நண்பன்	(ரோகீர் பந்து)	32
8.	புகழ்	(க்யாதிர் விடம்பனு)	37
9.	ஆரியரும் அநாரியரும்	(ஆர்ய ஓ அநார்ய)	48
10.	ஒரே குடும்பம்	(ஏகான்னவர்த்தீ)	56
11.	தீர விசாரணை	(ஸூக்ஷ்ம விசார)	63
12.	திராத தொல்லை	(ஆச்ரம பீடா)	69
13.	இறுதிச் சடங்கு	(அந்த்யேஷ்டி-ஸத்கார)	80
14.	ரஸிகன்	(ரஸிக)	87
15.	குரு வாக்கியம்	(குருவாக்ய)	92

1. பரீட்சை

(மாணவன் மதுசூதனன். உபாத்தியாயர் காலா சாந்த் பாடம் சொல்லித் தருகிறார்)

[மாணவனின் தந்தை வருகிறார்.]

தகப்பனார்: மதுசூதனன் எப்படிப் படிக்கிறான், காலாசாந்த் பாபு?

காலா: பையன் கொஞ்சம் குறும்புக்காரன்தான்; ஆனால், படிப்பில் மட்டும் ரொம்பக் கெட்டி. எதையும் ஒரு தடவை சொன்னால் போதும். இரண்டாம் தடவை சொல்லித் தர வேண்டாம். ஒரு தடவை நான் கற்றுக் கொடுத்ததை அவன் மறப்பதே இல்லை.

தகப்: அப்படியா? இன்று நான் பரீட்சை செய்து பார்க்கிறேன் ஒரு தடவை.

காலா: செய்யுங்களேன்.

மது: [தனக்குள்] நேற்று மாஸ்டர் அடித்த அடி இன்னும் என் முதுகு பற்றி எரிகிறது. இன்று பழி வாங்கத்தான் வேண்டும். இவரை விரட்டாவிட்டால் பாரேன்!

தகப்: ஏண்டா,* மோதோ! பழைய பாடமெல்லாம் நினைவு இருக்கிறதா?

மது: மாஸ்டர் சொல்லிக் கொடுத்தது எல்லாம் நினைவிருக்கிறது.

தகப்: சரி, குருத்து என்றால் என்ன?

மது: மண்ணைப் பிளந்துகொண்டு வெளியே வருவது குருத்து.

---

* மதுசூதனன் என்பதின் குறுக்கம்

தகப் : உதாரணம் ஒன்று சொல்.

மது : மண் புழு.

காலா : (கண் சிவக்க) ஆ! என்ன சொன்னுய்!

தகப் : கொஞ்சம் பொறுங்கள். இப்போது ஒன்றும் சொல்ல வேண்டாம்.

[மதுசூதனனை நோக்கி]

நீ செய்யுள் படித்திருக்கிருயல்லவா? சரி. சொல் பார்க்கலாம், காட்டில் மலர்வது எது?

மது : முள்.

[காலாசாந்த் பிரம்பை ஓங்குகிருர்]

ஏன் ஸார் அடிக்கிறீர்கள். நான் பொய்யா சொன்னேன்!

தகப் : சரி, ஸிராஜ் உத்தெளலாவைக் கொன்றவன் யார்? சரித்திரத்தில் என்ன சொல்கிறது?

மது : கரையான் பூச்சி.

[பிரம்பால் அடிக்கிருர் காலாசாந்த்]

ஏன் ஸார் சும்மா அடிக்கிறீங்க? ஸிராஜ் உத்தெளலா மாத்திரமா! சரித்திரப் புத்தகம் பூராவாகவும் கரையான் அரித்து விட்டது. இதோ பாருங்கள்!

[காண்பிக்கிருன். காலாசாந்த் தலையைச் சொரிந்து கொள்கிருர்]

தகப் : இலக்கணம் நினைவிருக்கிறதா?

மது : இருக்கிறது.

தகப் : "கர்த்தா" [செய்பவன் என்று பொருள் படும்] என்ருல் என்ன? உதாரணத்தோடு தெளிவாகச் சொல்.

மது : கர்த்தா (யஜமானன்) அந்தப் பேட்டை ஜய முன்ஷி.

தகப் : ஏன் அப்படிச் சொல்கிருய்?

மது : அவர்தான் காரியங்களை யெல்லாம் கவனிக்கிருர்.

காலா : (கோபத்துடன்) உன் தலை.

[முதுகில் பிரம்பால்; அடிக்கிறார்]

மது : (திடுக்கிட்டு) அது தலையல்ல ; அது முதுகு.

தகப் : ஷஷ்டி—தத்புருஷம் (ஆறும் வேற்றுமை) என்றால் என்ன !

மது : தெரியாது.

[காலாசாந்த் பிரம்பைக் காட்டுகிறார்]

மது : அது நன்றாகத் தெரியுமே. அதுதான் பிரம்பு.

[தகப்பனார் சிரிக்கிறார். காலாசாந்த் பாபுவுக்கோ முகம் எள்ளும் கொள்ளும் வெடிக்கிறது]

தகப் : கணக்குப் போடுகிறாயா ?

மது : ஓ ! போடுவேன்.

தகப் : சரி, உன்னிடம் ஆறரை ஸந்தேஷ் கொடுத்து, ஐந்து நிமிஷம் நீ தின்றதும் மிகுதியை உன் தம்பிக்குக் கொடுக்க வேண்டும் என்று சொல்கிறேன். ஒரு ஸந்தேஷ் தின்ன இரண்டு நிமிஷம் ஆகிறது என்றால், எத்தனை ஸந்தேஷ் உன் தம்பிக்குக் கொடுக்க முடியும் ?

மது : ஒன்றுகூட இல்லை.

காலா : எப்படி ?

மது : எல்லாவற்றையும் தின்றுவிடுவேன். கொடுக்க முடியாது.

தகப் : ஓர் ஆலமரம் தினமும் கால் அங்குலம் வீதம் வளருகிறது. இந்த வைகாசி முதல் தேதி பத்து அங்குலம் இருந்தால் அடுத்த வைகாசி முதல் தேதி எவ்வளவு உயரம் இருக்கும் ?

மது : செடி வளைந்து சென்றால் சரியாகச் சொல்ல முடியாது. நேராகவே வளர்ந்தால் அளந்து பார்த்துச் சொல்லி விடலாம். அதற்குள் உலர்ந்து போய் விட்டால் வேறு விதியே இல்லை.

காலா : அடி விழாவிட்டால் உன் புத்தி நேராகாது- தரித்திரப் பயலே! கொடுக்கிற உதையில் உன் முதுகு சிவந்து, நீ நேராகி விடுவாய் பார்.

மது : இல்லை ஸார். நேராக இருப்பது கூட அடித் தால் வளைந்து விடும்.

தகப் : காலாசாந்த் பாபு! இது உங்கள் தவறு. அடிப்பதால் ஆகிற காரியம் வெகு சொல்பமே. கழுதையை அடித்தால் குதிரை யாகுமா! ஆனால் பல சமயங்களில் குதிரை கழுதைபோல் ஆகிவிடுவதுண்டு. எத்தனையோ பிள்ளைகள் கற்றுக் கொள்கிறார்கள். ஆனால் எத்தனை உபாத்தியாயர்களுக்குப் பாடம் சொல்லித் தரத் தெரிவதில்லை. நடுவில் அடிபட்டுச் சாவது பிள்ளை கள்தாம். உங்கள் பிரம்புடன் நீங்கள் போகலாம் கொஞ்ச நாள் மதுசூதனின் முதுகு ஆறட்டும். நானே பாடம் சொல்லித் தருகிறேன்.

மது : (தனக்குள்) அப்பாடி! பிழைத்தேன்.

காலா : பிழைத்தேன் ஐயா! இந்தப் பையனுக்குச் சொல்லிக் கொடுப்பது வெறும் உடல் உழைப்புத்தான். முப்பது நாள் ஒரு பிள்ளையைக் கவனிக்க ஐந்து ரூபாய் தான் கிடைத்தது! அதைவிட மண்வெட்டினாலும் குறைந்தது பத்து ரூபாயாவது கிடைக்குமே!

2. வயிறும் முதுகும்

முதல் காட்சி

[வீட்டு முன் வாயிலில் காலை நீட்டி உட்கார்ந்து வனமாலி சந்தோஷமாக ஸந்தேஷ் தின்று கொண்டிருக்கிறான். வயது. 7. தீன்கடி வருகிறான். வயது 15.]

தீன் : [ஸந்தேசை ஆவலுடன் பார்த்தவாறு] என்னடா வடகிருஷ்ணா! என்ன பண்ணுகிறாய்?

[வனமாலி பதிலின்றி அவனையே பார்க்கிறான்]

என்னடா, பதில் சொல்லேன். உன் பேர் வடகிருஷ்ணன் இல்லையா!

வன : [சுருக்கமாக] இல்லை.

தீன் : வடகிருஷ்ணனாகத்தான் இருக்க வேண்டும் அப்படியானால் உன் பேரென்ன சொல்.

வன : என் பேர் வனமாலி.

தீன் : [சிரித்து] சின்னப் பையன், ஒன்றுமே தெரியவில்லை. வனமாலியும் வடகிருஷ்ணனும் ஒன்று. தானே! வனமாலி என்றால் என்ன அர்த்தம் தெரியுமோ?

வன : தெரியாது.

தீன் : வனமாலி என்றால் வடகிருஷ்ணன். வட கிருஷ்ணன் என்றால் என்ன தெரியுமா?

வன : தெரியாது.

தீன் : வடகிருஷ்ணன் என்றால் வனமாலி. சரி, உங்கப்பா உன்னை எப்போதாவது வடகிருஷ்ணா என்று கொஞ்சுவாரா?

வன : இல்லை.

தீன் : சீச்சி! எங்கப்பா என்னை வடகிருஷ்ணு என்பார். மதுவின் அப்பா கூட அவனை வடகிருஷ்ணு என்று கொஞ்சுவாராம். உங்கப்பா உன்னைக் கொஞ்சுவதில்லையா! சீச்சி.

[பக்கத்தில் உட்காருகிறான்]

வன : [பெருமையுடன்] அப்பா என்னை 'பூது' என்பார்.

தீன் : சரி. பூது, உன் வலக்கை எது சொல் பார்க்கலாம்.

வன : [வலக் கையைத் தூக்கி] இது என் வலக்கை.

தீன் : சரி, உன் இடக்கை எது சொல்.

வன : [இடக் கையைத் தூக்கி] இது இடக்கை.

தீன் : [சட்டென்று இலையிலிருந்து ஒரு ஸந்தேஷை வாயருகில் கொண்டு போய்] சரி, இது என்ன சொல்.

[வனமாலி பரபரப்புடன் அதைப் பிடுங்கப் பார்க்கிறான்]

தீன் : [கோபத்துடன் முதுகில் ஓர் அறை வைத்து] இத்தனை வயசாகிறது. அது கூடத் தெரியவில்லையா! இது ஸந்தேஷ். இதைத் தின்ன வேண்டும்.

[தீன்கடியின் வாயினுள் அந்த ஸந்தேஷ் மறைகிறது]

வன : [முதுகைத் தடவிக் கொண்டே] அம்மா...ஆ!

தீன் : சீச்சி! உனக்கு எப்போதுதான் புத்தி வருமோ! இதுகூட உனக்குத் தெரியாதா! வயிற்றுக்குத் தின்றால் முதுகு தாங்கும்.

[இன்னொரு ஸந்தேஷை வாயில் போட்டுக் கொள்கிறான்]

வன : [இரு மடங்கு வேகத்துடன்] அம்மா...

தீன் : பின் நீ என்ன சொல்கிறாய்? வயிற்றுக்குத் தின்றால் முதுகு தாங்காது என்கிறாயா? இதோ பாரேன். வயிற்றுக்குத் தின்றால்...

[இன்னொரு ஸந்தேஷைத் தின்று]
முதுகு தாங்கும்.

(வனமாலியின் முதுகில் அறை]
தாங்குகிறதா இல்லையா?

வன : [அழுது கொண்டே, கத்துகிறான்] இல்லை இல்லை...

தீன் : [கடைசி ஸந்தேஷைத் தின்று விட்டு] இருக்கும். உன்னால் தாங்க முடியாது போலிருக்கிறது. அவனவன் உடம்பு வாசி. கிடக்கிறது. இனி மேல் வேண்டாம். ஆனால் இது மட்டும் தெரிகிறது. சிலர் வயிறு எதையும் தாங்கும். சிலருக்கு முதுகு எதையுமே தாங்காது. உன்னையும் என்னையும் போல.

[திடீரென்று வனமாலியின் அப்பா வருகிறார்]

அப்பா : ஏண்டா பூது, ஏன் அழுகிறாய்?

[தகப்பனைக் கண்டு வனமாலி இருமடங்கு வேகத்துடன் அழுகிறான்]

தீன் : [வனமாலியின் முதுகில் தடவியவாறு மெல்லிய குரலில்] அப்பா கேட்கிறார், பதில் சொல்லு.

வன : [அழுகையுடன்] என்னை அடிக்கிறான்.

தீன் . ஏதோ பெரிய பையன் இந்தப் பிள்ளையை அடித்து விட்டுப் போய் விட்டான். பாவம், இவன் பேரில் தப்பே இல்லை. ஸந்தேஷை எல்லாம் தின்று விட்டு விளையாடிக் கொண்டிருந்த போது...

தகப் : [கோபத்துடன்] யாரடா உன்னை அடித்தது?

வன : [தீன்கடியைக் காட்டி] இவன் தான் அடித்தான்.

தீன் : ஆமாம். அவனை நான் நன்றாக அடித்தேன். யாருக்குத்தான் கோபம் வராது? நீங்களே சொல்லுங்கள். பாவம், சின்னப் பிள்ளை விளையாடுகிறான்—வேண்டுமென்று அவனை அடிப்பானேன். தட்டைத்தான் ஏன்

பிடுங்க வேண்டும்? நீங்கள் இருந்திருந்தால் நீங்களே அடித்திருப்பீர்கள்.

அப்பா: நான்இருந்தால் அவன் உடம்பில் இரண்டு எலும்பு கூட இருந்திருக்காது. இருக்கும் முரட்டுத் தடியனெல்லாம் இந்தத் தெருவில்தானு இருக்க வேண்டும்?

வன: அப்பா, அவன் என் ஸந்தேஷை...

தீன்: [தடுத்து] அடே! அடே! அதை ஏண்டா சொல்கிருய்?

தகப்: என்ன விஷயம்?

தீன்: அது ஒன்றுமில்லை. நான் இரண்டணுவுக்கு ஸந்தேஷ் வாங்கி இவனுக்குக் கொடுத்தேன். சின்ன விஷயம். அதைப் போய்ச் சொல்லுவானேன்!

அப்பா: [சந்தோஷத்துடன்] நல்லது. உன் பெயரென்னடாப்பா?

தீன்: [பணிவாக] என் பெயர் தீன்கடி முகோபாத்யாய்.

அப்பா: உன் தகப்பனுர் பெயர்?

தீன்: க்ஷுதிராம் முகோபாத்யாயர்.

அப்பா: நீ எனக்கு ரொம்ப வேண்டியவன். க்ஷுதிராம் எனக்கு அத்தானுகை வேண்டும்.

[தீன்கடி தரையில் விழுந்து வணங்குகிருன்]

வாடா பையா, உள்ளே வா. ஏதாவது சாப்பிட்டுப் போகலாம். இன்று தை மாதம், பிட்டுச் சாப்பிடாமல் போகக்கூடாது.

தீன்: சரி, அப்படியே ஆகட்டும்.

அப்பா: இன்று ராத்திரி இங்கேயே இருந்து விடு. நாளை மத்தியானம் சாப்பிட்டுவிட்டு வீட்டுக்குப் போகலாம்.

தீன்: சரி, அப்படியே ஆகட்டும்.

இரண்டாம் காட்சி

[உட்புறம் தீன்கடி பிட்டுத் தின்று கொண்டிருக்கிறுன்]

தீன்: [தனக்குள்] வலக்கை ஜோராகத்தான் வேலே செய்கிறது. பரவாயில்லே.

வனமாலியின் அம்மா: [இலேயில் நான்கு பிட்டு போட்டு] அப்பா, சும்மா இருக்கக் கூடாது. இந்த நான்கையும் தின்று விடு.

தீன்: அப்படியே.

[சாப்பிடுகிறுன். அப்பா வருகிறுர்]

அப்பா: அதென்ன? 'இலே காலி.' அடியே! ஒரு எட்டு பிட்டுக் கொண்டு வா.

[பிட்டு போடப்படுகிறது)

அப்பனே! இதைச் சாப்பிட்டாக வேண்டும். இதற்குள் எழுந்து விடலாமா?

தீன்: அப்படியே.

[சாப்பிடுகிறுன். அத்தை வருகிறுள்]

அத்தை: [வனமாலியின் அம்மாவை நோக்கி] அடியம்மா! தீன்கடியின் இலே காலியாக இருக்கிறதே! வாயைப் பிளந்து கொண்டு நிற்காதே! போய் பத்து பிட்டு போடு. கூச்சப்படாதேடா அப்பா. நன்ருகச் சாப்பிடு.

தீன்: அப்படியே!

[அத்திம்பேர் வருகிறுர்]

அத்: அப்பனே! நீ இன்னும் சாப்பிட வில்லேயா! கொண்டுவா. இங்கே கொண்டா! பத்து பிட்டுப் போடு இவன் இலேயில். உங்கள் வயசில் நான் வாத்தைப் போலத் தின்னுவேன். எல்லாவற்றையும் தின்ன வேண்டும்.

தீன்: அப்படியே.

[பாட்டி வருகிறுள்]

பாட் : [பூதுவின் அம்மாவை நோக்கி] அடியே! பிட்டு எல்லாம் காலியாகி விட்டது. ஒன்றுகூட மிச்சமில்லை,

அம் : என்னம்மா செய்வது?

பாட் : என்ன செய்வதா ?

[தின்கடியின் பக்கம் போய் விளையாட்டாக அவன் முதுகில் ஒரு குத்து வைக்கிருள்]

பிட்டு இன்னும் வேண்டுமா?

தின் : வேண்டாம்.

பாட் : அதென்ன? இன்னும் இரண்டு தின்னு.

[இன்னும் இரண்டு குத்து விழுகிறது]

தின் : [எழுந்து] வேண்டாம். இதற்குமேல் தேவையில்லை.

மூன்ரும் காட்சி

[மறுநாள் தீன்கடி படுத்திருக்கிருன். பக்கத்தில் வனமாலி]

தின் : [பலவீனமான குரலில்] பூது! உங்கப்பா எங்கேடா?

வன : வைத்தியரைக் கூப்பிடப் போயிருக்கிருர்.

தின் : [பரிதாபமாக] வைத்தியர் வந்து என்ன செய்வார்? மருந்து சாப்பிடக் கூட வயிற்றில் இடமேது?

வன : உன் வயிற்றில் என்ன வந்து விட்டது, தீன்கடி அண்ணு?

தீன் : என்னவாவது வரட்டும். நேற்று உனக்குச் சொல்லிக் கொடுத்தது நினைவிருக்கிறதா?

வன : இருக்கிறது.

தீன் : என்ன, சொல் பார்க்கலாம்.

வன : வயிற்றுக்குத் தின்ருல் முதுகு தாங்கும்.

தீன் : இன்று இன்னும் ஒன்று சொல்லித் தருகிறேன். மனதில் வைத்துக் கொள். 'பிட்டுத் தின்ருல் வயிறு தாங்காது.'

3. வரவேற்பு

முதல் காட்சி.

ஊர்த் தெரு.

[சதுர்புஜபாபு எம். ஏ. படித்துவிட்டு ஊருக்கு வருகிறான். இதனால் ஊரில் பரபரப்பு ஏற்படும் என்று அவன் நினைத்தான். கூடவே கொழு கொழு வென்று இருக்கும் காபூலிப் பூனை இருக்கிறது]

[நீலரதன் வருகிறார்]

நீல : அட, சதுர் பாபுவா! எப்போது வந்தீர்கள்?

சது : காலேஜில் எம். ஏ. பரீட்சை எழுதி—

நீல : அடாடா! இந்தப் பூனை ரொம்ப நன்றாக இருக்கிறது!

சது : இந்த வருஷம் பரீட்சை மிகவும்—

நீல : இந்தப் பூனை எங்கே கிடைத்தது?

சது : வாங்கினேன். இந்தத் தடவை பாடம்—

நீல : எவ்வளவு ரூபாய் ஆயிற்று?

சது : நினைவில்லை. நீலரதன் பாபு! நம் ஊரில் யாராவது 'பாஸ்' செய்தார்களா?

நீல : எத்தனையோ! ஆனால் இந்த மாதிரிப் பூனை இந்தப் பக்கத்தில் கிடையாது.

சது : [தனக்குள்] நாசமாய்ப் போச்சு. இவன் ஏதடா, பூனையைப் பற்றியே பேசுகிறான்! நான் 'பாஸ்'

செய்துவிட்டு வந்திருக்கிறேன். இவன் அந்தப் பேச்சே எடுக்கவில்லையே !

[ஜமீன்தார் வருகிறார்]

ஜமீன் : ஏண்டா சதுர்புஜா, இத்தனை நாள் கல்கத்தாவில் உட்கார்ந்து கொண்டு என்னடா செய்தாய்?

சது : எம். ஏ. படித்துவிட்டு வருகிறேன்.

ஜமீன் : என்ன ! மேயவிட்டு வருகிறாயா ? இந்தப் பூனையையா ?

சது : நீங்கள் தவறாகப் புரிந்து கொண்டீர்கள். நான்...

ஜமீன் : தவறு என்ன ! இந்த மாதிப் பூனையை இந்த ஜில்லாவிலேயே தேடிக் கண்டுபிடி, பார்க்கலாம்.

சது : இல்லை. பூனையைப் பற்றி நான் சொல்லவில்லை.

ஜமீன் : பூனையைப் பற்றித்தானே பேச்சு. நான் சொல்கிறேன், இந்தப் மாதிரிப் பூனை கிடைக்கவே கிடைக்காது.

சது : [தனக்குள்] பிடித்துக் கொண்டானே பாவி !

ஜமீன் : மத்யான்னமாக பூனையுடன் வீட்டுப் பக்கம் ஒரு தடவை வாயேன். பையன்கள் பார்த்தால் சந்தோஷப் படுவார்கள்.

சது : ஆகா, அதற்கென்ன ! பையன்கள் என்னைப் பார்த்து ரொம்ப நாளாகிறது.

ஜமீன் : ஆமாம், ஆமாம். அதுவும் சரி. ஆனால் நான் சொல்வது! உன்னால் வர முடியாவிட்டாலும் வேணியின் கையில் பூனையை அனுப்பு. பசங்களுக்குக் காட்டலாம்.

[போகிறார்]

[ஸாது சித்தப்பா வருகிறார்.]

ஸாது : அடே நீயா ! பார்த்து ரொம்ப நாளாகிறதே !

சது : இருக்காதா ! எத்தனை பரீட்சைகள்...

ஸாது : இந்தப் பூனை—

சது : [கோபத்துடன்] நான் வீட்டுக்குப் போகிறேன். [கிளம்புகிறான்]

ஸாது : அடே! கேட்டுவிட்டுத்தான் போயேன். இந்தப் பூனை—

சது : இல்லை. எனக்கு வீட்டில் வேலை இருக்கிறது.

ஸாது : இதற்குப் பதில் சொல்லிவிட்டுப் போயேன் இந்தப் பூனை...

[பதில் சொல்லாமல் சது வேகமாகப் போகிறான்]

ஸாது : நல்லபிள்ளைதான் போ! இரண்டு பரீட்சையில் தேறி விட்டால் போதும்! பெரிய துரையாகி விடுகிறார்கள். இருக்கிற குணம்தான் தெரிகிறதே! அதில் முக்காலுக்கு அகம்பாவம்தான்!

[போகிறார்]

இரண்டாம் காட்சி

[சதுர்புஜன் வீட்டு உள் அறை]

வேலைக்காரி : அம்மா! நம்ப சின்ன ஐயா என்னவோ தெரியவில்லை. ரொம்ப எரிமுஞ்சியாக வருகிறார்.

அம்மா : ஏனடீ?

வேலை : அது ஏனோ, எனக்கு என்ன தெரியும்?

[சதுர்புஜன் வருகிறான்]

சின்னத்தம்பி: அண்ணா, எனக்கு இந்தப் பூனையை—

சது : [அவனை ஓங்கி அறைகிறான்] ராப்பகல் இல்லை. எப்போது பார், பூனை, பூனை, பூனை—

அம்மா : வேண்டுமென்று எரிந்து விழுகிறான். பாவம், இத்தனை நாள் கழித்து வீடு வருகிறான். எரிச்சல் மூட்டினால்! போங்களடா, எல்லாரும் போங்கள்.

[சதுர்புஜனை நோக்கி]

என்னிடம் கொடுடாப்பா. பாலும் சாதம் வைத்திருக்கிறேன். உன் பூனைக்குக் கொடுக்கலாம்.

சது : [ரோஷம் பொங்க] இந்தாம்மா ! நீங்கள் பூனைக்கே செய்யலாம் உபசாரம். எனக்கு வேண்டாம் ஒன்றும். நான் போகிறேன்.

அம்மா : [பரிதாபமாக] அதென்னடாப்பா! உனக்கு சாப்பாடு தயாராக இருக்கிறதே ! குளித்துவிட்டு வா, சாப்பிடலாம்.

சது : எனக்கு வேண்டாம். உங்கள் ஊரில் பூனைக்குத்தான் மரியாதை. படித்தவனுக்கு ஒரு மதிப்பும் இல்லை.

[பூனையைத் தடியால் அடிக்கிறான்]

சித்தி : அடே ! அதை அடிக்காதேடப்பா ! அது ஒரு தப்பும் பண்ணவில்லையே !

சது : ஒரு பூனையின்மேல் இவ்வளவு தயை தாட்சிண்யம் உங்களுக்கு...அதில் ஒரு பங்குகூட மனிதன் மேல் இல்லையே !

[போகிறான்]

சின்னத் தங்கை : [திரை மறைவைச் சுட்டி] ஹரி சித்தப்பா ! அதன் வால் எப்படி புஸு புஸு என்று இருக்கு பாரேன் !

ஹரி : யார் வால் ?

பெண் : அதோ அதன் வால்தான்.

ஹரி : சதுர்புஜனுடையதா ?

பெண் : இல்லை. அந்தப் பூனையின் வாலைத்தான் சொன்னேன்.

மூன்றாவது காட்சி

[வழி. கையில் பையுடன் சதுர்புஜன். அவனுடன் பூனை இல்லை]

ஸாதுசரணன் : ஸார், உங்கள் பூனை எங்கே ?

சது : அது செத்துப்போய் விட்டது.

ஸாது : அடடா ! எப்படி ஸார் செத்தது ?

சது : [எரிச்சலுடன்] எனக்குத் தெரியாது ஐயா.

[பராண்பாபு வருகிருர்]

பராண் : ஐயா, உங்கள் பூனை எங்கே?

சது : அது செத்துப்போய் விட்டது.

பராண் : அப்படியா? எப்படிச் செத்தது?

சது : நீங்கள் எப்படிச் சாகப் போகிறீர்களோ அப்படித்தான். கழுத்தில் சுருக்கிட்டுக் கொண்டு செத்தது.

பராண் : அடேயப்பா! ஆள் எரிமுஞ்சிபோல் தோன்றுகிறது!

[சதுர்புஜன் பின்னல் ஊர்ப் பிள்ளைகளின் கூட்டம் கைகொட்டிக் கொண்டு அவர்கள், 'காபூலிப் பூனை, காபூலிப் பூனை' என்று அவனுக்கு எரிச்சல் மூட்டுகிருர்கள்]

4. நல்லமருந்து

முதல் காட்சி

[இரைப்பு வாங்க நொண்டியவாறு ஹாராதனன் வருகிருன்.]

ஹாரா : அப்பாடி! டாக்டர் துரையின் தோட்டத்தில் வாத்து முட்டை திருடப்போய் நன்ருக மாட்டிக் கொண்டு விட்டேன். துரை துரத்திக் கொண்டு வந்ததைப் பார்க்கணுமே! ஒரு நிமிஷம் போயே விட்டிருப்பேன்! பயந்து எடுத்த ஓட்டத்தில் சாக்கடையில் விழுந்துவிட்டேன். கால் ஒடிந்தது பற்றிக் கவலே இல்லே. உயிரோடு வந்தேனே! அதுவே போதும். யாராவது உடம்பு என்று வந்தால் டாக்டர் பட்டுப்பட்டென்று தீர்த்துக் கட்டி விடுகிருர். எனக்கோ உடம்பு கிடம்பு ஒன்று மில்லே! என்னேயே தீர்த்து விடப் பார்த்தாரே! இனிமேல் தினமும் வாத்து முட்டை திருடக்கூடாது. ஒரேயடியாக வாத்தையே அமுக்கி விடவேண்டும். நம் வீட்டிலேயே முட்டை போடும்.

[உள்ளே குரல் - 'ஹாரு']

ஹாரா : [பயத்துடன்] ஐயோ, அப்பா வந்து விட்டாரே! என் ஒரு கால் ஒடிந்ததைக் கண்டால், உதைக்கிற உதையில் இன்னெரு காலும் போய்விடுமே !

[உள்ளே குரல் – 'ஹாரு']

[பதில் இல்லே.]

அடே ஹாரா! [அதற்கும் பதில் இல்லே]

அடே ஹேரோ!

[தகப்பனுர் வருகிறுர்]

ஹாரா: [முன்வந்து] அப்பா!

தகப்: என்னடா நொண்டுகிறுய்?

[ஹாராதன் தலேயைச் சொரிகிருன்]

தக: [கோபத்துடன்] காலே எங்கேடா முறித்துக் கொண்டாய்?

ஹா: [பயத்துடன்] நான் வேண்டுமென்று முறித்துக் கொள்ளலேயப்பா.

தக: அதுதான் தெரிகிறதே! எங்கே முறித்துக் கொண்டாய், சொல்லு.

ஹா: தெரியாது, அப்பா.

தக: உன் கால் முறிந்தது உனக்குத் தெரியாமல் அந்தப் பேட்டை கோப்ரா வாணியனுக்குத் தெரியும் போலிருக்கு!

ஹா: எப்போது முறிந்ததோ தெரியவில்லே அப்பா!

தக: அப்படியா! இந்தக் கழியால் உன் மண்டையைப் பிளந்தால் நன்ருகத் தெரியும், இல்லேயா!

ஹா: [பரபரப்புடன் கைகளால் தலேயை மூடிக் கொண்டு] இல்லேயப்பா! இந்தத் தலேயைக் காப்பாற்றப் போய்த்தான் காலே முறித்துக் கொண்டேன்.

தக: புரிகிறது. அன்று பண்ணினுயே! அதே போல் டாக்டர் வீட்டில் வாத்து முட்டை திருடப் போனுயா! அதனுல்தான் உன் காலே நன்ருக முறித்து அனுப்பியிருக்கிறுர் அவர்.

ஹா: [கண்களேப் பிசைந்து கொண்டே] ஆமாம்பா, என்பேரில் தப்பு இல்லே. நானுக முறித்துக் கொள்ளவில்லே. அவர்தான் முறித்து விட்டார்.

தக: தரித்திரம்! உனக்கு சூடு சுரணேயே கிடையாதா?

ஹா: சூடு சுரணே என்ருல் என்னப்பா!

தக: அப்படியென்றால் என்ன தெரியுமா?
[முதுகில் ஒரு குத்து வைக்கிறார்]
இதுதான் சூடு சுரணை என்பது.

ஹா: இதுதான் எனக்குத் தினமும் கிடைக்கிறதே!

தக: நீ ஜெயிலுக்குப் போய்த்தான் சாகப் போகிறாய்.

ஹா: இல்லையப்பா! தினமும் இப்படி சூடு சுரணை கிடைத்தால் வீட்டிலேயே செத்துபோய்விடுவேன்.

தக: சே! உன்னோடு என்னால் முடியவே இல்லை.

ஹா: [கூடைக்குள் பார்த்து] அப்பா! நுங்கு யாருக்கப்பா! எனக்குக் கொடேன்.

தக: [முதுகில் அறை வைத்து] இந்தா, வாங்கிக் கொள்.

ஹா: [முதுகைத் தடவியவாறு] இது நன்றாகவே இல்லை அப்பா!

[உள்ளே குரல்: ஹாரு]

ஹா: என்னம்மா!

உள்ளே குரல்: உனக்காக வடை சுட்டு வைத்திருக்கிறேன். சாப்பிடவா.

[நொண்டியவாறு ஹாராதன் உள்ளே போகிறான்]

இரண்டாம் காட்சி

[ஹாராதன் டாக்டரின் வீட்டில் வாத்தைத்
திருட முயலுகிறான்]

தக: [தொலைவில்] ஹாரு!

ஹாரா: அடே! அப்பா வந்துவிட்டாரே: என்ன செய்வது?

[ஹாராதனின் கழுத்திலிருந்து வயிறு வரையில் பை தொங்குகிறது. அதனுள் அவன் வாத்தைப் போட்டுக் கொள்கிறான்]

தக: ஹாரு!

[பதில் இல்லை]

ஹாரா! [பதில் இல்லை]
ஹேரோ!

ஹா: என்னப்பா!

தக: என்னடா உன் வயிறு அப்படி ஊதிக் கிடக்கிறது?

ஹா: அப்பா! நேற்று வடை தின்றதனால்—

தக: ஏன் அப்படி 'க்வாக் க்வாக்' என்று ஓசை வருகிறது?

ஹா: வயிறுதான் இரைகிறது.

தக: சரி, வா. அமுக்கிப் பார்க்கலாம்.

ஹா: [பரபரப்புடன்] தொடாதே! தொடாதே. ரொம்பவும் வலிக்கிறது.

[வயிற்றினுள் 'க்வாக்' என்று ஓசை]

தக: [தனக்குள்] புரிந்தது. இவனுக்கு நல்ல பாடம் கற்றுத்தர வேண்டும். [வெளியில்] உன் உடம்பு லேசுப்பட்டதல்ல. வாடாப்பா உன்னை ஆஸ்பத்திரிக்கு அழைத்துப் போகிறேன்.

ஹா: வேண்டாம்பா. இப்படித்தான் அவ்வப்போது எனக்கு உடம்புக்கு வருகிறது. தன்னால் குணமாகி விடும்.

[க்வாக் க்வாக் என்று ஓசை]

தக: என்னடா இது? ஓசை அதிகமாகிறது! வா, வா, நாழிகையாக்காதே!

[இழுத்துக் கொண்டு போகிறார்]

மூன்றாவது காட்சி

[ஹாராதன்: அவன் தாய் தகப்பனார்]

தாயார்: [அழுதுகொண்டே] அப்பா! ஹாரு! உனக்கு என்னடா வந்தது?

தக: ஆமாண்டீ. நீ வேறு அழுது ஆர்ப்பாட்டம் பண்ணாதே. ஆஸ்பத்திரிக்குப் போனால் தன்னால் குணமாகிவிடும்.

தாய்: நான அழுது ஆர்ப்பாட்டம் பண்ணுகிறேன், அல்லது உங்கள் பிள்ளையின் வயிறு என்கிறேன்! [பயத்துடன்] 'வாத்தைப் போல் அல்லவா 'க்வாக்,' 'க்வாக்' என்று ஓசை வருகிறது. அப்பா ஹாரு! இனிமேல் நீ வாத்து முட்டையே தின்னக் கூடாது. உன் வயிற்றுக்குள் வாத்துதான் கத்துகிறது. என்ன ஆகுமோ தெரியவில்லையே!

[அழுகிறான்]

ஹா: இல்லையம்மா. அது வாத்தில்லை. அது வடைதான். வாத்தென்று யார் சொன்னது! வாத்தே இல்லை. இருக்கவே முடியாது. பந்தயம் கட்டிக் கொள்: இது வடையேதான்.

தாய்: வடை எங்கேயாவது கத்துமாடா?

ஹா: நீ கொஞ்சம் கம்மென்றிரேன். உன் ஆர்ப்பாட்டத்தால் என் வயிறு பின்னும் அதிகமாக ஓசைப்படுகிறது.

தக: போஸ் வீட்டில் எனக்குக் கொஞ்சம் வேலை இருக்கிறது. கவனித்துவிட்டு வந்து ஆஸ்பத்திரிக்கு அழைத்துப் போகிறேன்.

[போகிறார்]

[க்வாக், க்வாக், க்வாக்]

தாய்: அம்மாடி! இது அதிகமாகப் போச்சே! முகுஜ்ஜே பாபு!

[முகர்ஜி வருகிறார்]

முகர்: என்னம்மா விஷயம்?

தாய்: குழந்தைக்கு உடம்பு அதிகமாகிறது. இவனைச் சீக்கிரம் ... உங்கள் ... என்னமோ பேர் சொல்வார்களே! ... அதான் ஆசுபத்திரிக்கு அழைத்துக் கொண்டு போங்களேன்.

முகர்: நான் அப்போதே பிடித்துச் சொல்லுகிறேன். ஹாருவின் அப்பன்தான் இத்தனை நேரம்

ஆக்கிவிட்டான். [ஹாராவை நோக்கி] உம், எழுந்திருடா. வா !

ஹா : இல்லே, தாத்தா. நான் ஆஸ்பத்திரிக்கு வர மாட்டேன். எனக்கு ஒன்றும் இல்லே.

முகர் : ஒன்றுமில்லேயா உனக்கு ? உன் வயிறு போடுகிற இரைச்சல் ஊரெல்லாம் கேட்கிறது ! வயிற்றுக்குள் வாதம், பித்தம், கபம் எல்லாம் சேர்ந்து ஒரே குழப்பம் செய்கின்றன !

[பலவந்தமாக ஹாருவை இழுத்துப் போகிருர்.]

நான்காவது காட்சி

[ஆஸ்பத்திரியில் டாக்டர் துரையும் ஹாராதனும்]

டாக் : என்னடா உன் வயிற்றில் ?

ஹா : ஒன்றுமில்லே டாக்டர். என்னே இந்தத் தடவை விட்டுவிடுங்கள். எனக்கு ஒன்றுமில்லே.

டாக் : ஒன்று மில்லே என்ருல் இது என்ன ?

[வயிற்றில் குத்த, இரு மடங்கு 'க்வாக்,' 'க்வாக்' என்ற இரைச்சல் கேட்கிறது.] [சிரித்து] உன் வியாதி எனக்கு நன்ருக விளங்கிவிட்டது.

ஹா : சத்தியமாக உங்களேத் தொட்டுச் சொல்கிறேன் டாக்டர். எனக்கு உடம்புக்கு ஒன்றுமில்லே. இந்த மாதிரி இனிமேல் செய்யவே மாட்டேன்.

டாக் : உனக்கு வந்திருக்கிறது கடுமையான நோய் தான்.

ஹா : டாக்டர், எனக்கு இருக்கும் உடம்பு என்னே விட உங்களுக்கு ரொம்பத் தெரியுமோ ?

['க்வாக்', 'க்வாக்']

[கோபத்துடன் பையை ஓங்கி அடித்து]

நாசமாய்ப் போக ! கூச்சலே நிறுத்த மாட்டே !

டாக் : [பெரிய கத்தியை எடுத்து] உன் திருட்டு வியாதிக்குக் கத்திதான் சரியான வைத்தியம்.

[வயிற்றைக் கிழிக்க வருகிருர்]

ஹா : [அழுது வாத்தை வெளியே எடுத்து] டாக்டர், இந்தாருங்கள் ! உங்கள் வாத்து. என் பங்கில் இது ஒட்டவில்லை. இதைவிட முட்டையே தேவலே.

[ஹாராதனனைப் பிடித்து டாக்டர் அடிக்கிருர்.]

ஹா . டாக்டர், இனிமேல் அவசியமில்லை. என் உடம்பு நன்ருகக் குணமாகிவிட்டது!

5. ஆழ்ந்த யோசனை

முதல் காட்சி

[யோசனையில் ஆழ்ந்திருக்கிறான் நரஹரி. இலையில் இட்ட சோறு உலர்ந்து கொண்டிருக்கிறது. அவன் தாய் ஈ ஓட்டிக் கொண்டிருக்கிறாள்.]

தாய் : அவ்வளவு யோசனை செய்யாதேடாப்பா. குழந்தே ! மூளை கெட்டுவிடும்.

நர : சரி அம்மா. குழந்தே என்றாயே, அது எந்த வார்த்தையிலிருந்து வருகிறது, தெரியுமா ?

தாய் : எனக்கு என்னடாப்பா தெரியும் !

நர : குழவி ! இன்று நீ குழந்தை என்றாய். இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் குழவி என்பார்கள். இதைக் கொஞ்சம் நன்றாக யோசனை செய்து பார். இது சாதாரணமான விஷயமல்ல. இதை நீ எவ்வளவுக் கெவ்வளவு யோசிக்கிறாயோ, அவ்வளவுக் கவ்வளவு அதற்கு முடிவே கிடையாது.

[மீண்டும் யோசனையில் ஆழ்கிறான்]

தாய் : முடியாத விஷயத்துக்கு யோசனை என்னடாப்பா ! உன் யோசனைதான் என்றைக்குமே இருக்கிறது. சோறு உலர்ந்து போகிறது. என் செல்வமோல்லியோ ! எழுந்திருடாப்பா.

நர : [திடுக்கிட்டு] என்னம்மா சொன்னே ! செல்வமா ? என்ன ஆச்சரியம் ! ஒரு காலத்தில் திருமகளைச் செல்வமென்று அழைத்தார்கள். பிறகு, திருமகளின் குணங்களை யொட்டி ஒழுக்கமிருந்த பெண்களை

செல்வமென்றுர்கள். இப்போது, ஆண்களைக்கூட செல்வமே என்று அழைக்கத் தொடங்கிவிட்டார்கள். கொஞ்சம் யோசித்துப் பாரேன் அம்மா! மெல்ல மெல்ல மொழியே மாறிப் போகிறது, பார். நினைத்தால் ஆச்சரியமாக இல்லையா!

[இரண்டாவது தடவையாக யோசனையில் ஆழ்கிருன்]

தாய் : எனக்கு வேறு கவலையே இல்லையடா. நரு! சரி, நீயே சொல்! கையில் இருக்கிற வேலையைப் பற்றி தற்போது யோசிக்காமல் அனாவசியமான விஷயங்களைப் பற்றி எதற்கு யோசனை? அந்தந்தக் கவலைக்கு வேளை சமயம் இல்லையா?

நர : இது ரொம்பக் கஷ்டமான சொல். இதற்குத் திடீரென்று பதில் சொல்லிவிட முடியாது. கொஞ்ச நாட்கள் யோசிக்க வேண்டும். பின்னர் பதில் சொல்கிறேன்.

தாய் : நான் எதைச் சொன்னாலும் உன் யோசனை வளர்ந்துகொண்டே போகிறதே தவிர, குறைகிற வழியாக இல்லை. வேண்டாமடா அப்பனே! நான் வேறு யாரை யாவது அனுப்பிவைக்கிறேன்.

[போகிருள்]

[சித்தி வருகிருள்]

சித் : என்னடா நரு! உனக்குப் பைத்தியம் பிடித்துவிட்டதா என்ன? கிழிந்த சால்வை, முகம் நிறைந்த மீசை, தாடி! எதிரே சோறு! கவலை என்னடா உனக்கு! ஸுபலின் அம்மா உன்னைக் கண்டு சிரித்து ஊரெல்லாம் உன் அசட்டுத்தனத்தைப் பற்றிச் சொல்லித் திரிகிருளடா, மகாபாரதக் கதையைப் போல.

நர : ஆ, பாரதக் கதையா! அந்த குருக்ஷேத்திரத்திலே! நமது ஆர்யவம்சத்துக்குப் பெருமை தரும் மயான பூமி. இதை எண்ணும் போது மயிர்க்கூச்செறிய வில்லையா! உள்ளம் சலசலக்கவில்லையா! ஆஹா!

எத்தனை விஷயங்கள் நினைவுக்கு வருகின்றன! எத்தனையோ யோசனைகள்! என்ன சொன்னாய் சித்தி! அவளா ஊரெங்கும் சொல்லிச் சிரிக்கிறாள்? பாரத யுத்தம்! அதைக் கேட்டு அழுது தீர்த்தாள் என்று சொல். [கண்ணீர் வடிக்கிறான்]

சித் : அடியம்மா! அழத் தொடங்கி விட்டானே! எங்கள் பேச்சைக் கேட்டு அழுகை வந்துவிட்டதே! வேண்டாமடாப்பா!

[போகிறாள்]

பாட்டி : [வருகிறாள்] அடே நரு! சூரியன் அஸ்தமித்து விட்டதுடா!

நர : இல்லை பாட்டி, சூரியன் அஸ்தமிக்காது. உலகந்தான் உருண்டு போகிறது. இரு, உனக்குத் தெளிய வைக்கிறேன்.

[நாலா பக்கமும் பார்த்து]

ஓர் உருண்டையான சாமான் அகப்படவில்லையே!

பாட்டி : இதோ உன் தலை இருக்கிறது. முண்டம் இருக்கிறது.

நர : ஆனால், தலை கெட்டியாகப்புதைந்திருக்கிறது. சுற்றாதே அது!

பாட்டி : உனக்குத்தான் சுற்றவில்லை. ஊரிலே உன்னைப் பார்த்து எல்லாருக்கும் தலை சுற்றல் எடுத்துவிட்டது. சரி, எனக்கு நீ சொல்ல வேண்டாம். இதைப் பார். சாதம் சில்லிட்டுப் போய்விட்டது. ஈ நொய் என்று மொய்க்கிறது.

நர : பாட்டி! ஈ நொய் என்று கத்தாது. அதன் இறக்கைகள் தான் அப்படிச் சப்தம் எழுப்புகின்றன. இரேன். உனக்கு நன்றாக எடுத்துக் காட்டுகிறேன்.

பாட்டி : நீயுமாச்சு; உன் உதாரணமுமாச்சு.

[போகிறாள்]

இரண்டாவது காட்சி

[நரஹரி யோசனையில் ஆழ்ந்திருக்கிறன். அவனுடைய சிந்தனையைக் கலைக்க அவன் தாய் சின்னக் குழந்தையான அவனுடைய மருமகனைக் கொணருகிருள்.]

தாய்: [குழந்தையைப் பார்த்து] மாமாவுக்கு வணக்கம் சொல்லடா கண்ணு!

நர: அவனுக்குத் தபபாகச் சொல்லிக் கொடுக்காதே. கொஞ்சம் யோசித்துப் பார். வணக்கம் சொல்லுவதல்ல; பண்ணுவது. புரியவில்லையா உனக்கு! ஏனென்ருல், வணக்கம் என்ருல்...

தாய்: வேண்டாமடாப்பா! எனக்கு அப்புறம் புரிய வைக்கலாம். உன் மருமகனைக் கொஞ்சிக் கொண்டிரு சற்று நேரம்.

நர: கொஞ்சுவதா! சரி வா! [குழந்தையை வாங்கிக் கொண்டு] எப்படி ஆரம்பிப்பது? இரு, கொஞ்சம் யோசிக்கிறேன். [யோசனையில் மூழ்குகிருன்]

தாய்: ஏண்டா, குழந்தையைக் கொஞ்சக்கூட யோசனை செய்ய வேண்டுமா?

நர: யோசிக்க வேண்டாமா, அம்மா! குழந்தைகள் எதிர்காலம் எல்லாம் குழந்தைப் பருவத்தில்தான் ஊன்றியிருக்கிறது. சின்ன வயதில் நடக்கும் ஒவ்வொன்றும் நிழல் போல் பெரியதாகி நமது இளமையை மட்டுமென்ன, வாழ்க்கை முழுவதையுமே மறைத்து விடுகிறது என்பதை யோசிக்கையில்... குழந்தையைக் கொஞ்சுவது என்ருல் சாதாரணமான விஷயமா? இதைக் கொஞ்சம் யோசித்துப் பார்.

தாய்: கிடக்கிறதுடா! அதை அப்புறமாக யோசிக்கிறேன். அவனுடன் இப்போதைக்கு ஏதாவது பேசு.

நர: அவர்களுடன் பேசுவது அவர்களுக்கு வேடிக்கையாகவும், அதே சமயம் புத்தி புகட்டுவதாகவும்

இருக்க வேண்டும். சரி, ஹரிதாஸ்! உன் பெயர் சந்தி பிரித்துச் சொல் பார்க்கலாம்.

குழந்தை ஹரி : நேக்கு சந்தேஷ் கொடு.

தாய் : அப்பனே! அவனுக்கு அதெல்லாம் என்னடா தெரியும்?

நர : இல்லை. இப்போது முதல் கொண்டு கொஞ்சம் கொஞ்சமாக எல்லாவற்றையும் மனப்பாடமாக்கி விடுகிறேன், பாரேன்.

தாய் : [குழந்தையை எடுத்துக் கொண்டு] இல்லை! நீ அவனைக் கொஞ்சவே வேண்டாமடாப்பா.

[நரஹரி தலையில் கை வைத்து மீண்டும் யோசனையில் ஆழ்கிருன்.]

தாய் : [பரிதாபமாக] அப்பா! என்னைக் காசிக்கு அனுப்பிவிடு. அங்கேயே இருக்கிறேன்.

நர : போயேன். உனக்கு இஷ்டமானல் நான் ஏன் தடுக்கிறேன்.

தாய் : [தனக்குள்] நான் எது சொன்னலும் யோசனை செய்பவன், இதற்கு மட்டும் தடாலென்று ஒப்புக்கொண்டானே! [வெளிப்படையாக] சரி, மாதம் எனக்குக் கொஞ்சம் ரூபாய் மட்டும் அனுப்ப ஏற்பாடு செய்துவிடு.

நர : அப்படியா! அப்படியானல் நான் கொஞ்ச நாள் யோசனை செய்ய வேண்டும். இது சுலபமானதல்ல. ஒருவாரம் யோசித்த பின்னர் சொல்லுகிறேன்.

தாய் : [பரபரப்புடன்] வேண்டாம். நீ யோசிக்கவே வேண்டாம். நானும் காசிக்குப் போகவில்லை.

6. இல்லாத குறை

[கவிஞர் குஞ்சவிஹாரி பாபுவும் வசம்வத பாபுவும்]

குஞ்ச : என்ன காரணமோ தங்கள் வருகைக்கு!

வசம் : எனக்குச் சோற்றுக்கே வழியில்லை. நீங்கள் சொன்னீர்களே அந்த வேலை ..

குஞ்ச [பரபரப்புடன்] வேலையா! வேலை எதற்கு ? இன்று இந்த இனிய சரத்காலத்தில் வேலையைப் பற்றி எவன் பேசுவான்?

வசம் : இல்லை, வேண்டுமென்று எவனைவது பேசுவானு! வயிற்றின் இடும்பைதான்...

குஞ்ச : வயிற்றின் இடும்பையா! சீச்சி, அது ஈனத் தனமான பேச்சு! அதை மறுபடியும் சொல்லாதீர்கள்.

வசம் : இல்லை, இனிமேல் சொல்லவில்லை. ஆனல் அது எப்போதும் நினைவு இருந்து கொண்டே இருக் கிறது.

குஞ்ச : என்னது ! எப்போதும் மனதில் இருக் கிறதா ? இப்படி மலர்ச்சியும் அமைதியும் மண்டிய இனிய அந்திப் பொழுதில் கூடவா அது மனத்தில் படுகிறது.

வசம் : இராமல் என்ன ! இப்போது இன்னும் அதிகமாகப் படுகிறது. பத்தரை மணிக்கு இரண்டு பிடி அள்ளிப் போட்டுக்கொண்டு வேலைதேடக் கிளம்பினவன் தான். அப்புறம் எதுவும் வாயில் போடக்கூட இல்லை.

குஞ்ச : இராவிட்டால்தான் என்ன ? சாப்பிடா விட்டால் என்ன ?

[வசம்வதபாபு தலையைச் சொரிகிருர்]

இந்த சரத்கால நிலவில் இதுகூட உங்களுக்குத் தோன்றவில்லையா? பிராணிகளைப் போல் சாப்பிடாமலேயே மனிதனால் பிழைத்திருக்க முடியுமென்று உங்களுக்குத் தோன்றவில்லையா! இந்த நிலவொளி, மலர்களின் மணம், சுகமானகாற்று இவைகளை அனுபவித்தே வாழ்க்கையை ஓட்டிவிடலாமே!

வசம்: [பயத்துடன் மெதுவாக] ஆமாம். வாழ்க்கையை ஓட்டி விடலாம். ஆனால் உயிரைக் காப்பாற்றிக் கொள்ள முடியாது. அதற்குக் கொஞ்சம் உணவும் தேவை.

குஞ்ச: [சூடாக] சரி சரி, நீங்கள் சாப்பிடப் போங்களேன். பிடிப் பிடியாக சோறும் பருப்பும் பச்சடியுமாக விழுங்குங்கள். இங்கு நீங்கள் வருவதுகூடத் தப்பு.

வசம்: அது எனக்கு எங்கே கிடைக்கும்? இப்போதே போய் விடுகிறேன். சொல்லுங்கள்.

[குஞ்சவிஹாரிக்குக் கோபம் ஏறுவதைக் கண்டு]

குஞ்சபாபு, நீங்கள் சொல்வது ரொம்ப சரி. இந்தப் பூஞ்சோலையின் இனிய காற்றை அனுபவித்தாலே வயிறு நிறைந்து விடும். வேறு எதுவும் சாப்பிடவே பிடிக்காது.

குஞ்ச: இதை உங்கள் வாயால் கேட்டதில் மிகவும் சந்தோஷம். இதுதான் உண்மையில் மனிதனின் பேச்சு. வாருங்கள், வெளியே போகலாம். இந்த மாதிரியான பூங்கா இருக்கும்போது, உள்ளே அடைபட்டுக் கிடப்பானேன்?

[தனக்குள் மெதுவாக]

பனி விழும் வேளை. உடம்பில் ஒரு சால்வைகூட இல்லை...

குஞ்ச: ஆகா! சரத் காலத்தின் இனிமையே இனிமை!

வசம்: உண்மையே. ஆனால் சற்றுக் குளிர்...

குஞ்ச : [உடம்பில் சால்வையைப் போர்த்திக் கொண்டு] கொஞ்சம்கூடக் குளிர் இல்லை.

வசம் : ஆம். குளிர் இல்லை.

[வெடவெட என்று நடுக்கம் அவருக்கு]

குஞ்ச : [வானை நோக்கி] ஆகா! பார்த்தாலே கண் குளிர்கிறது. துண்டு துண்டாக வெண் முகில்கள் நீல வானில், பொய்கையில் அன்னம்போல் மிதந்து போவதும், அவற்றின் நடுவில் அம்புலி...

வசம் : [இருமல் வருகிறது] கக்...கக்!...

குஞ்ச : நடுவே அம்புலி...

வசம் : கக் கன் கக்!

குஞ்ச : [அவரைத் தள்ளி] கேட்கிறதா, இவற்றின் நடுவே வெள்ளித்தட்டு போல் மதி.

வசம் : கொஞ்சம் பொறுங்கள். கக்...கக்...

குஞ்ச : [எரிச்சலுடன்] நீங்கள் ரொம்பக் கெட்டவர். இப்படி இருமுவது என்றால் வீட்டுக்குள்ளே கம்பளி போர்த்துக் கொண்டு கிடப்பதுதானே! இந்த மாதிரியான தோட்டம்...

வசம் : [பயத்துடன் இருமலை அடக்கி] இனி எனக்கு எதுவும் இல்லை. [தனக்குள்] அதாவது கம்பளியுமில்லை, கந்தையுமில்லை.

குஞ்ச : இந்த அழகைக் கண்டால் எனக்கு ஒரு பாட்டு நினைவுக்கு வருகிறது. பாடட்டுமா!

மஞ்சு உலாவும் சோலை—அங்கு
மலர் நிறைந்த கொடி ஒன்று.
நெஞ்சை அள்ளும் மகிழம்...

வசம் : [தும்மல் வருகிறது] அச்சு!

குஞ்ச : நெஞ்சை அள்ளும்...

வசம் : அச்சு! அச்சு!...

குஞ்ச : கேட்கிறதா? நெஞ்சை அள்ளும்..

வசம் : அச்சு! அச்சு!...

குஞ்சு : போ வெளியே! என் பூங்காவை விட்டு ஓடு.

வசம் : இருங்கள். அச்சூ!

குஞ்சு : போ, இங்கிருந்து!

வசம் : இதோ போகிறேன். இனிமேல் ஒரு நிமிஷம் கூட இருக்க எனக்கும் விருப்பம் இல்லை. நான் போகா விட்டால் என் உள்ளிருக்கும் ஆத்மா வெளியேறி விடும். அச்சூ! சரத்காலத்தின் இனிமை என் மூக்கு கண்ணெல்லாவற்றையும் கிளறி விட்டது. உயிர்கூட இந்தத் தும்மலுடன் வெளியே வந்து விடும் போல் இருக்கிறது. அசுக்! அச்சூ! கக்...கக்...ஆனல் குஞ்சபாபு, தயை செய்து அந்தவேலையை மட்டும்...அச்சூ!

[குஞ்சபாபு சால்வையைப் போர்த்துக்கொண்டு வானத்தில் நிலவை நோக்கியவாறு நிற்கிறுர்]

[வேலைக்காரன் வருகிறுன்]

வேலை : சாப்பாடு தயாராக இருக்குதுங்க.

குஞ்ச : ஏண்டா நேரமாக்கினுய்? சாப்பாடு கொண்டுவர இரண்டு மணி நேரமா உனக்கு!

[விரைவாகப் போகிறுர்]

7. நோயாளியின் நண்பன்

[ரெயில் வண்டியில் துக்கிராமும் வைத்யநாத பாபுவும்]

வைத்ய : [தலையில் கை வைத்து] ஊ......ஊ...

துக்கி : [பெருமூச்சுடன்] ஐயோ ! ஐயோ !—

[அனுதாபத்துடன் வைத்யநாத பாபுவை நோக்குகிருன்]

வைத்ய : [துக்கிராமின் அனுதாபக் குரலைக் கேட்டு] பார்த்தீர்களா, இந்த நோவைப் பாருங்கள். எவ்வளவு கஷ்டம் கொடுக்கிறது ! -

துக்கி : இல்லை. நான் அதைக் கவனிக்கவில்லை. உங்களைப் பார்த்தால் எனக்கு என் தமையனின் நினைவு வருகிறது. ஆஹா !

[பெருமூச்சு விடுகிருன்]

வைத்ய . அதென்ன !

துக்கி : ஆமாம் ஸார். சாகும்போது அவர் உங்களைப் போலத்தான் ஆகி விட்டார்.

வைத்ய : [பரபரப்புடன்] என்ன சொன்னீர்கள்?

துக்கி : உண்மையாகத்தான் சொல்கிறேன். இப்படித்தான் கண் உள்ளே போயிருந்தது. கன்னம் சதையெல்லாம் தொங்கி, கைகால் மெலிந்து விட்டது. உதடு வெளுத்து, முகம் எல்லாம் மாறி......

வைத்ய : [கவலையுடன்] என்ன சொன்னீர்கள் ! எனக்கும் அப்படி ஆகி விட்டது என்று சொல்கிறீர்கள் ! இதுவரை எனக்கு யாருமே சொல்லவில்லையே...

துக்கி : எப்படித்தான்? சொல்லுவார்கள் இந்த உலகத்தில் எங்கே உண்மையான நண்பன் இருக்கிறன்?

[பெருமூச்சு விடுகிறன்]

வைத்ய : டாக்டர்தான் திரும்பத் திரும்பச் சொன்னரே. கவலைப்படக் காரணமே இல்லை என்றரே!

துக்கி : டாக்டர்! அவர் சொல்லுவதை நீங்கள் கடுகளவு கூட நம்புகிறீர்களா? டாக்டரை நம்பித்தான் கரைகாணுத கடலில் விழுந்து நாம் தவிக்கவில்லையா? ஆபத்து கிட்டி வரும்போதுதான் அவர்கள் அதிகமாக ஆறுதல் சொல்லுவார்கள். கடைசியில் நோயாளிக்கு கைகால் தளர்ந்து கண் மலர்ந்து, கைகால்கள் விறைத்துப் போகும் போது.........

வைத்ய : [துக்கிராமின் கையைப் பிடித்துக் கொண்டு] மன்னியுங்கள் ஸார்; இதற்கு மேல் சொல்ல வேண்டாம். என் கைகால்கள் விறைத்தே விட்டன. உங்கள் வர்ணனை எல்லாம் இப்போதே எனக்குப் பலித்து விட்டது...

[மார்பில் கையை அழுத்தி]

ஊ!......

துக்கி : பார்த்தீர்களா! நான்தான் சொன்னேனே! டாக்டர்களின் வார்த்தையை நம்பவே கூடாது கொஞ்சம் கூட. சரி, ஒன்று உங்களைக் கேட்கிறேன். நீங்கள் ராத்திரி மல்லாந்து படுப்பதுண்டா?

வைத்ய : ஆமாம். மல்லாந்து படுக்காவிட்டால் எனக்குத் தூக்கம் வராது.

துக்கி : [பெரு மூச்சுடன்] என் அண்ணுவுக்குக் கூட அப்படித்தான் ஆயிற்று. அவனல் திரும்பிக்கூடப் படுக்க முடியாதபடி இருந்தது.

வைத்ய : நான் இஷ்டப்பட்டால் பக்கம் திரும்பிப் படுக்க முடியுமே!

3

துக்கி: இப்போது முடியும். ஆனால் போகப் போக முடியாது.

வைத்ய: உண்மையாகவா!

துக்கி: வரவர உங்கள் வலது மார்புக் கூட்டில் ஒரு நோவு ஆரம்பிக்கும். மெல்லக் கால்விரல்கள் அசைக்க முடியாமல் முழங்கால் வீங்கும். அப்புறம்......

வைத்ய: [வியர்வை முத்தெடுக்க] உங்களுக்குக் கோடி புண்ணியம் உண்டு. அதற்குமேல் சோல்லாதீர்கள். என் மார்பு படக், படக் என்று அடித்துக் கொள்கிறது.

துக்கி: இப்போதே நீங்கள் எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும்.

வைத்ய: அவசியம்தான். தெரிகிறது. ஆனால் என்ன செய்ய வேண்டுமென்று சொல்லுங்கள்.

துக்கி: இங்கிலீஷ் வைத்தியம் பார்க்கிறீர்களா?

வைத்ய: ஆமாம்.

துக்கி: அடடா! இங்கிலீஷ் வைத்தியர்கள் விஷத்தையல்லவா கொடுக்கிருர்கள்! வியாதியைவிட மருந்து கொடுமையாயிற்றே! யமனைவிட டாக்டரிடம் தான் பயம் அதிகம் எனக்கு.

வைத்ய: [கவலையுடன்] அப்படியா! என்ன செய்வது? ஹோமியோபதி வைத்யம் பார்க்கலாமா?

துக்கி: ஹோமியோபதி தண்ணீர் வைத்தியமல்லவா!

வைத்ய: பின் நாட்டு வைத்தியனைக் கூப்பிடலாமா?

துக்கி: அதைவிடக் கொஞ்சம் அபினை ஜலத்தில் குழைத்துச் சாப்பிடலாமே!

வைத்ய: ராமராம! பின் என்ன செய்யலாம்? நீங்களே சொல்லுங்கள்.

துக்கி: செய்ய என்ன இருக்கிறது? வழியே இல்லை. இதை நான் அழுத்தமாகச் சொல்ல முடியும்.

வைத்ய: நானோ நோயாளி. எனக்கு இப்படிப் பயம் காட்டுவது நல்லதா?

துக்கி: பயமெதற்கு? இந்த வாழ்க்கையே துயர், ஆபத்து, கஷ்டங்கள் நிரம்பியது. நாலா பக்கமும் இருள் கவிந்திருக்கிறது. இருள் மேகம் போல் கவலை சூழ்ந்தது. எங்குப் பார்த்தாலும் பரிதாபக் குரல்தான் கேட்கிறது. இங்கு நாமோ விஷப் பாம்பின் புற்றில் வசிக்கிறோம். இங்கிருந்து விடை பெற்றுக் கொள்வதும் மேலானது தான்.

[பெரு மூச்சு]

வைத்ய: இதோ பாருங்கள். டாக்டர் என்னை எப்போதும் வேடிக்கையும், சிரிப்புமாக இருக்கச் சொன்னார். உங்களைக் கண்டது முதல் என் நோய் கபகப வென்று அதிகமாகி விட்டது. என்னைக் கண்டு உங்களுக்கு அண்ணனைப் பிரிந்த வேதனை கிளம்பியது. ஆனால் உங்கள் கருந்தாடியை உதறினால் ஒன்றரை டஜன் பிள்ளைகளைத் தொலைத்த வேதனை உதிருமே! ஒன்றாவது நல்ல வார்த்தையாகச் சொல்லுங்களேன். இது என்ன ஸ்டேஷன்?

துக்கி: இது மதுபூர். இங்கே இந்த வருஷம் வந்த காலராவை என்னவென்று சொல்வது!

வைத்ய: [பரபரப்புடன்] காலராவா! என்னது! இங்கே வண்டி எவ்வளவு நேரம் நிற்கும்?

துக்கி: அரை மணி. ஆனால் ஐந்து நிமிஷம் நின்றால் போதாதா?

வைத்ய: [படுத்துக் கொண்டு] என்ன தலையெழுத்தோ!

துக்கி : பயப்படுவது பின்னும் கெடுதல்! பயப் படுவதற்கு முன்பே காலரா வந்து விடுமாம்! லரி துரையின் புஸ்தகத்தில்......

வைத்ய : நீங்கள் என்னை விட்டுப் போனால் பயமும் என்னை விட்டுவிடும். என் எலும்பெல்லாம் நடுங்கச் செய்து விட்டீர்கள் நீங்கள். சீக்கிரம் டாக்டரைக் கூப்பிடுங்கள். எனக்கு என்னவோ போலிருக்கிறது.

துக்கி : டாக்டர் எங்கே?

வைத்ய : ஸ்டேஷன் மாஸ்டரையாவது கூப்பிடுங்கள்.

துக்கி : வண்டி கிளம்பிக் கொண்டே இருக்கிறது.

வைத்ய : கார்டைக் கூப்பிடுங்கள்.

துக்கி : கார்டு உங்களுக்கு என்ன செய்ய முடியும்?

[பெருமூச்சு]

வைத்ய : சரி, ஹரியையாவது கூப்பிடுங்கள். எனக்கு எல்லாம் முடிந்து விட்டது.

[மூர்ச்சையாகிறார்]

[துக்கிராம்] [திரும்பத் திரும்ப பெருமூச்சுடன் பாடுகிறான்.]

அந்திக் காலம் அச்சம் தருவதென்று நினை மனமே.!

8. புகழ்

முதல் காட்சி

[வக்கீல் துகடிதத் நாற்காலியில் உட்கார்ந்திருக்கிறார் காங்காலி சரண் பயந்தவாறு கையில் சந்தா புத்தகத்துடன் உள்ளே வருகிறான்.]

துகடி: என்ன வேண்டும்?

காங்காலி: ஐயா! நீங்கள் தேச சேவையில் ஈடுபட்டவர்...

து: அது எல்லாருக்குமே தெரிந்ததுதான். ஆனால் வந்த விஷயம் என்ன?

கா: நீங்கள் சாதாரண ஜனங்களின் நன்மைக்காகப் பாடுபட்டு...

து: வக்கீல் தொழில் நடத்துகிறேன். அதுவும் தெரியாத விஷயமல்ல. ஆனால் நீ எதற்காக வந்தாய்?

கா: நான் சொல்ல வந்தது பெரியதல்ல.

து: சரி, சட்டுப்பட்டென்று சொல்லேன்.

கா: கொஞ்சம் யோசனை செய்து பார்த்தால் நீங்களே ஒப்புக் கொள்ளுவீர்கள். "கானாத் பரதரம் நஹி...(இசையை விடச் சிறப்பானதொன்று உண்டோ)

து: அப்பனே, யோசனை செய்து ஒப்புக் கொள்ளுவதற்கு முன்னால் நீ சொன்னதற்குப் பொருள் தெரிய வேண்டும். அதை வங்கமொழியில் சொல்லேன்.

கா: ஐயா, எனக்கு வாங்காளி மொழி சரியாகத் தெரியாது! ஆனால் அதன் உட்கருத்து இதுதான். அதாவது பாட்டென்பது கேட்க இனிமையாக இருக்கும்.

து: எல்லாருக்குமே அல்ல.

கா: இசையை அனுபவிக்கத் தெரியாதவன்—

து: வக்கீல் ஸ்ரீமான் துகடிதத்!

கா: இல்லை. நீங்கள் அப்படிச் சொல்லக்கூடாது.

து: பின், பொய் சொல்லச் சொல்கிருயா!

கா: ஆர்யாவர்த்தத்தில் பரதமுனிவர்தான் இசையின் முதல்......

து: பரதமுனியின் பேரில் ஏதாவது வழக்குத் தொடுப்பதானல் சொல். இல்லாவிட்டால் உன் சொற்பொழிவை நிறுத்து.

கா: சொல்ல எத்தனையோ இருக்கிறது.

து: ஆனல் எனக்குக் கேட்க ஒழிவில்லை.

கா: சரி, சுருக்கமாகச் சொல்கிறேன். இந்தப் பட்டணத்தில் "கான உன்னதி விதாயினி" [இசை வளர்ப்புக் கழகம்] என்று ஒரு சபை நிறுவப்பட்டிருக்கிறது. அதற்குத் தாங்கள்...

து: சொற்பொழிவா?

கா: இல்லை.

து: தலைமை தாங்கவேண்டுமா?

கா: இல்லை.

து: பின் என்ன செய்யவேண்டும்? பாட்டுப் பாடுவது, கேட்பது என்ற இரண்டும் என்னல் இதுவரை ஆகவில்லை. இனியும் நடக்காது. அதை முதலிலேயே சொல்லி விடுகிறேன்.

கா: நீங்கள் அந்த இரண்டையும்பற்றி நினைக்கத் தேவையே இல்லை.

[சந்தா புத்தகத்தை நீட்டி]

கொஞ்சம் சந்தா மட்டும்......

து: [பரபரவென்று எழுந்து] சந்தாவா! நாசமாய்ப் போச்சு! நீ சாதாரணமான பேர்வழி இல்லையப்பா! ஏதோ நல்லவன் போல் வந்தாயே முகத்தை வைத்துக்

கொண்டு! ஏதோ விபத்தில் சிக்கி வழக்குத் தொடுக்க வந்தாய் என்று நினைத்தேன், போ! உன் சந்தாப் புத்தகத்தை எடுத்துக் கொண்டு போய்விடு. இல்லாவிட்டால் அத்துமீறி நுழைந்ததற்காக உன்மேல் போலீஸ் வழக்குத் தொடுப்பேன்.

கா: கேட்டது சந்தா! கிடைத்ததோ கல்தா! [தனக்குள்] ஆனால் உன்னை நான் அடக்காமல் விடப் போவதில்லை.

இரண்டாம் காட்சி

[துகடி பாபு கையில் சில பத்திரிகைகளுடன் உட்கார்ந்திருக்கிறார்]

து: நல்ல வேடிக்கைதான் இது! கங்காலிசரண் என்று எவனோ ஒருவன் இங்லீஷ், வங்காளி பத்திரிகைகளுக்கெல்லாம் எழுதி அனுப்பி யிருக்கிறான். நான் அவர்களுடைய "கான உன்னதி விதாயினி" சபைக்கு ஐயாயிரம் ரூபாய் தானம் கொடுத்தேனாம். தானமாவது! நான் கழுத்தைப் பிடித்து வெளியே தள்ளாததுதான் பாக்கி! நடுவே என் பேர் பிரபலமாகி விட்டது. இது என் தொழிலுக்கும் ஒரு விதத்தில் சௌகரியந்தான். அவர்களுக்கும் இது ஒருவாறு லாபம்தான். ஐயாயிரம் தானம் கிடைத்தது என்றால் ஜனங்கள் அதை ஓர் உயர்ந்த சபை என்று கருதுவார்களல்லவா! நாலைந்து பேர் நல்ல சந்தாவும் கொடுக்க முன்வருவார்கள். எது எப்படியோ எனக்கு இது ஒரு அதிர்ஷ்டமென்றே சொல்லவேண்டும்.

[குமாஸ்தா வருகிறார்]

கு: நீங்கள் கான உன்னதி சபைக்கு ஐயாயிரம் ரூபாய் தானம் கொடுத்தீர்களா?

து: [தலையைச் சொறிந்துகொண்டு சிரிப்புடன்] ஆமாம். அதுவும் பேச்சா! அதையேன் காதில் போட்

டுக் கொள்கிருய்? கொடுத்தேன் என்று யார் சொன்னூர்கள்? கொடுத்தேன் என்றே வைத்துக்கொள். அதனுல் என்ன வந்துவிட்டது! இத்தனே தடபுடல் எதற்கு?

கு: ஆஹா! என்ன பணிவு! ஐயாயிரம் ரூபாய் ரொக்கம் கொடுத்துவிட்டு மறைக்க முயலுகிருரே! இது சாதாரனப் பேர்வழிகளால் ஆகக் கூடிய செயலா?

[வேலேக்காரன் வருகிருன்]

வேலே: கீழே அறையில் நிறையப் பேர் காத்துக் கொண்டிருக்கிருங்க.

து: [தனக்குள்] பார்த்தாயா! ஒரே நாளில் என் செல்வாக்கு இவ்வளவு உயர்ந்துவிட்டது பார்த்தாயா? [களிப்புடன்] ஒவ்வொருவராக மேலே அழைத்துவா. கொஞ்சம் வெற்றிலே பாக்கு கொண்டுவந்து வை.

[முதல் பேர்வழி நுழைகிருன்]

து: [நாற்காலியை நகர்த்தி] வாருங்கள். ஹூக்கா குடிக்கிறீர்களா! அடே! வெற்றிலே கொண்டா.

மு: [தனக்குள்] ஆகா! என்ன பெருந்தன்மை! இவரிடம் ஆவல் நிறைவேருவிட்டால் வேறுயாரிடம்தான் நடந்தேறும்.

து: நீங்கள் வந்த விசேஷம் என்னவோ?

மு: உங்கள் தாராளகுணம் நாடெங்கும் பரவி யிருக்கிறது.

து: அவ்வதந்திகளே யெல்லாம் ஏன் காதில் போட்டுக் கொள்கிறீர்கள்?

மு: என்ன பணிவு! உங்கள் பேரைத்தான் கேள்விப்பட்டேன். இப்போது கண்ணுரக் கண்டு செவியாரக் கேட்டு மகிழ்வுற்றேன்.

து: [தனக்குள்] இவன் சீக்கிரமே வந்த காரியத்தைச் சொன்னுல் பரவாயில்லேயே! பல பேர் காத்திருக்கிருர்கள். [வெளிப்படையாக] சரி, உங்களுக்கு என்ன தேவை?

மு: தேச முன்னேற்றத்துக்காக உள்ளத்தின்...

து: அதையெல்லாம் ஏன் மறுபடியும் எடுத்து...

மு: அது சரி, உங்களைப் போல் மகானுபாவர்கள் பாரத நாட்டின்......

து: எல்லாம் ஒப்புக் கொள்கிறேன் ஐயா. அதையெல்லாம் விட்டுத் தள்ளுங்கள். அப்புறம்......

மு; பெரியமனுஷ்யர்களின் இயல்பே இப்படித்தான். தங்கள் புகழ் ...

து: போதும் போதும். வந்த விஷயத்தை எடுத்துச் சொல்லும்.

மு: உண்மையில் விஷயம் என்ன தெரியுமா! நாளுக்கு நாள் நம் நாடு தாழ்வடைந்து வருகிறது...

து: அதன் காரணம் சுருங்கச் சொல்லி விளங்க வைக்காததுதான்.

மு: பொன் கொழித்த நம் பாரத புண்ணியபூமி வறுமையின் பாழ்குழியில்......

து: [தலைவிதியே என்று தலையில் கைவைத்து உட்கார்ந்து] சொல்லுங்கள்...

மு: வறுமையின் பாழ்குழியில் நாளுக்கு நாள் அழுந்தி...

து: [வேதனைக் குரலில்] எனக்கு ஒன்றும் விளங்கவில்லையே, ஐயா!

மு: சரி, அப்படியானல் விஷயத்தை விளக்கி விடுகிறேன்...

து: [ஆவலும் களிப்பும் பொங்க] அதுதான் நல்லது.

மு: இங்கிலீஷ்காரன் கொள்ளையடிக்கிருன்.

து: இதுதான் விஷயம். ஆதாரம் காட்டுங்கள். மாஜிஸ்டிரேட் கோர்ட்டில் வழக்குத் தொடுக்கலாம்.

மு: மாஜிஸ்டிரேட்டும் கூடக் கொள்ளை அடிக்கத்தான் செய்கிருன்.

து: சரி, ஜில்லா ஜட்ஜ் கோர்ட்டில்...

மு: ஜில்லா ஜட்ஜ் பெரிய கொள்ளைக்காரன்.

து: [திடுக்கிட்டுப்போய்] நீங்கள் சொல்வது எனக்குக் கொஞ்சங் கூட விளங்கவில்லை.

மு: நான் சொல்ல வந்தது, நம் நாட்டுச் செல்வம் எல்லாம் வெளிநாட்டுக்குப் போகிறது.

து: வருந்தத்தக்க விஷயம்.

மு: அதனால்தான் ஒரு சங்கம்...

து: [திடுக்கிட்டு] சங்கமா!

மு: இதோ பாருங்கள் சந்தா......

து: [கண்கள் விரிய] சந்தாவா!...

மு: ஆமாம். ஏதாவது சந்தா...

து: [நாற்காலியை விட்டுத் துள்ளி எழுந்து] சந்தாவாம் சந்தா! போ வெளியே...போ...போ என்றால்...

[பரபரப்பில் நாற்காலி கவிழ்கிறது. மேஜையிலிருந்த மசிக்கூடு, கவிழ்ந்து மசிகொட்ட, முதல் பேர் வழி தடுக்கி விழுந்தடித்துக்கொண்டு வெளியேறுகிறார்]

[இரண்டாவது ஆசாமி வருகிறார்]

து: என்ன வேண்டுமோ?

இ: தங்கள் பெருந்தன்மை...

து: அதெல்லாம் புரிகிறது. போதும். புதிதாக ஏதாவது இருந்தால் சொல்லும்.

இ: தங்கள் பரோபகாரமும் தேச பக்தியும்...

து: அட இழவே. இவன்கூட அதே பல்லவியைப் பாடுகிறானே!

இ: தாய் நாட்டின் நல்வளம் பெருகத் தங்களுக்கு இருக்கும் அக்கறை...

து: விடாது போலிருக்கிறதே! வந்த விஷயம் என்னவென்று முதலில் சொல்லித் தொலையும்.

இ: ஒரு சங்கம்...

து: திரும்பவும் சங்கமா!

இ : இதோ சந்தாப் புத்தகம் !

து : சந்தாப் புத்தகமா ! எதற்கு !

இ : ஏதாவது சந்தா வசூல்...

து : சந்தாவா ! [கையைப் பிடித்து இழுத்து] எழுந்திரு. கிளம்பு. வெளியே போ, உயிர் தப்பிக்க வேண்டுமானல்.

[பதில் பேசாமல் இரண்டாவது பேர்வழி
போகிருன்]

[மூன்ருவது ஆள் வருகிருன்.]

து : இதோ பாருங்கள். என் தேச பக்தி, பெருந் தன்மை, பணிவு இதெல்லாம் பற்றி வேண்டியது கேட்டாயிற்று. இதற்குமேல் ஏதாவது இருந்தால் சொல்லு.

மு : உங்களுடைய சுபாவம் நான்கு பேர்களுடன் பழகும் தன்மை, வள்ளன்மை...

து : பரவாயில்லை ஏதோ புதிதாகத்தான் இருக்கிறது. ஆனல் ஐயா ! அதெல்லாம் கிடக்கட்டும் சாதாரண வார்த்தைகளில் வந்த காரியமென்னவோ சொல்லும்.

மு : நாங்கள் ஒரு புத்தகசாலை...

து : புத்தகசாலையா ! சங்கம் இல்லையே !

மு : இல்லை இல்லை. சங்கம் இல்லை.

து : பிழைத்தேன். புத்தகசாலையா! நல்லது. மேலே சொல்லுங்கள்.

மு : இதோ அகற்கான 'பிராஸ் பெக்டஸ்.'

து : சந்தா புத்தகம் இல்லையே !

மு : இல்லை. இல்லை. அச்சடித்த காகிதம்தான்.

து : ஆ...சரி. மேலே !

மு : ஏதாவது சந்தா...

து : [துள்ளி] சந்தாவா ! அப்பனே ! என் வீட்டின் மேல் கொள்ளைக்காரர்களாகப் படையெடுத்து விட்டீர்களே ! போலீஸ் ! போலீஸ் !

[மூன்ருவது பேர்வழி மேல் மூச்சுவாங்க ஓடுகிருன்]

[ஹரசங்கர பாபு வருகிறார்]

துகடி : அடே! வாப்பா, வா. ஹரசங்கர். வா. எப்போதோ காலேஜில் ஒன்றாகப் படித்தது. அப்புறம் உன்னைப் பார்க்கவே இல்லை. உன்னைக் கண்டு இன்று எனக்கு எவ்வளவு சந்தோஷம் தெரியுமா?

ஹர : உன்னோடு சுகதுக்கம் பேச எத்தனையோ கிடக்கிறது. அதெல்லாம் அப்புறம் ஆகட்டும். முதலில் உன்னிடம் வந்த காரியத்தை முடித்துக் கொள்கிறேன்.

துகடி : காரியமா! [களிப்புடன்] சொல்லப்பா சொல்லு. வேலை என்ற பேச்சையே கேட்டு வெகு நேரமாகிறது. கேட்டு என் காது குளிரும். சொல்லு.

[சால்வையினுள்ளிருந்து ஹரசங்கர் ஒரு நோட்டுப் புத்தகத்தை எடுக்கிறார்]

அதென்னப்பா, நோட்டுப் புத்தகம் கிளம்புகிறது!

ஹர : எங்கள் பேட்டையில் இளைஞர்கள் சேர்ந்து ஒரு சங்கம்...

துக : [திடுக்கிட்டு] சங்கமா!...

ஹர : ஆமாம். அதற்காகக் கொஞ்சம் நன்கொடை.

துக : நன்கொடையா! நீ என்னுடன் ரொம்ப நாளாகப் பழகியவன். ஆனால் அந்த வார்த்தையை மட்டும் என் எதிரே சொன்னாயோ, இனி ஜன்மத்துக்கும் உன்னுடன் எனக்குப் பகை மூண்டு விடும். ஆமாம், சொல்லிவிட்டேன்.

ஹர : சரியப்பா! ஏதோ கட்தஹ் 'கான உன்னதி சபா'வுக்கு ஐயாயிரம் கொடுத்தாயே, சிநேகிதன் சொன்னானே என்று ஐந்து ரூபாய்க்குக் கையெழுத்துப் போட உன்னால் முடியவில்லை. இனிமேல் எந்தப் பெரிய மனுஷ்யன் உன் வீட்டில் அடி எடுத்து வைப்பான்!

[வேகமாகப் போகிறார்]

[கையில் பேரேட்டுடன் ஒருவன் உள்ளே நுழைகிறான்]

துகடி : திரும்பவும் நோட்டுப் புத்தகமா! போ! ஓடு!

வந்தவன் : [பயத்துடன்] நான் நந்தலால் பாபுவின்......

துக : நந்தலாலோ, எந்தலாலோ, அதெல்லாம் எனக்குத் தெரியாது. ஓடு!

வந்தவன் : சார், அந்த ரூபாயை...

துக : என்னல் பணம் தர முடியாது. போ, போ!

[பேரேட்டுடன் வந்தவன் போகிருன்]

குமாஸ்தா : என்ன சார், இப்படிப் பண்ணி விட்டீர்களே! நந்தலால் பாபுவிடமிருந்து உங்களுக்குச் சேர வேண்டிய பணம் கொண்டு வந்தவன் அவன். அந்தப் பணம் வராவிட்டால் இன்று நடவாதே!

துக : என்னது! என்ன! ஓடு; அவனைக் கூப்பிடு; போ!

[குமாஸ்தா போன சற்று நேரத்துக்கெல்லாம் திரும்புகிருன்]

குமா : அவன் போய் விட்டான். எங்கும் காணவில்லை.

துக : பெரிய சங்கடமாய்ப் போச்சே!

[தம்பூராவுடன் ஒருவன் நுழைகிருன்]

என்ன வேண்டும்!

துறவி : உங்களைப் போன்ற ரசிகர் யார் இருக்கிருர்கள்? இசையின் வளர்ச்சிக்காக நீங்கள் எவ்வளவு செய்திருக்கிறீர்கள்! உங்கள் முன்னிலையில் பாடிக் காட்ட வேண்டும்.

[தம்புராவை மீட்டிக் கொண்டு பாடுகிருன்]

வாழ்கவே துகடி தத்தா!
வையமெங்கும் ஓங்கு புகழ் பெற்றவா!

துகடி : அடபாவமே! அப்பனே! போதும் நிறுத்து.

[தம்புராவுடன் இன்னொருத்தன் வருகிறான்]

இரண் : பாட்டைப் பற்றி அவனுக்கு என்ன தெரியும்! என் பாட்டைக் கேளுங்கள்.

துகடி தத்த! வாழ்க நீ!
நின் புகழ் யார் அறிவரே!

முதல் : வா ..ழ்...க...!

இரண் : து...க...டி...

முதல் : து...க...டி

துகடி : [காதைப் பொத்தி] பிராணன் போகிறதே! போதுமே...!

[தபலாவுடன் ஒருத்தன் வருகிறான்]

வந்தவன் : தபலா இல்லாமல் பாட்டா! சே! நன்றாக எடுக்காது!

[தபலா வாசிக்கிறான்]

[இரண்டாவது வாத்தியக்காரன் நுழைகிறான்]

இரண் : அவனுக்கு என்ன தெரியும் தாளமும் லயமும்! சுருதி சேர்க்கக் கூட வராதே!

முதல் பாடகன் : நிறுத்தப்பா நீ!

இரண்டாம் : நீதான் நிறுத்தேன்.

முதல் : உனக்குச் சங்கீதத்தைப் பற்றி என்ன தெரியும்!

[இருவரும் சேர்ந்து ஔடவ ஷாடவமாக என்று வாக்குவாதம் தொடங்குகிறார்கள். கீழ்ஸ்தாயிலிருந்து உச்சஸ்தாயி வரை தம்புராவோடு தம்புரா மோதுகிறது; தகதீம் தத்தீம் என்று தபலா சொற்கட்டுடன் வாய்ச் சண்டையும் வலுக்கிறது. சாரி சாரியாக பாடகர்களும், வாத்தியக்காரர்களும் கையில் சந்தா புத்தகங்களுடன் நுழைகிறார்கள்]

முதல் : மஷாய், பாட்டு...

இரண் : மஷாய், நன்கொடை...

மூன் : ஐயா, சங்கம்...

நான் : தங்கள் பெருந்தன்மை...

ஐந்தா : இமன் கல்யாணியில் ஒரு கீதம்...

ஆறும் : நாட்டு நலன் ...

ஏழாம் : ஸரிமியானின் டப்பா...

எட்டா : அட நிறுத்தப்பா. நீ ஒருத்தன்...

ஒன்ப : நான் சொல்ல வந்ததைச் சொல்லி விடுகிறேன். கொஞ்சம் பொறு...

[எல்லாரும் சேர்ந்து துகடியின் சால்வையைப் பிடித்து இழுக்கிறார்கள், 'நான் சொல்வதைக் கேளுங்கள்' என்று.]

துக : [குமாஸ்தாவை நோக்கி] நான் மாமா வீட்டுக்குப் போகிறேன். கொஞ்ச நாட்கள் அங்குதான் இருக்க வேண்டும். என் இருப்பிடத்தை யாருக்கும் சொல்லிவிடாதே!

[போகிறான்]

[வீட்டினுள் அன்று முழுவதும் பாடகர்களும், தபலாக்காரர்களும் சண்டை செய்ய அவர்களைத் தடுக்கப் போன குமாஸ்தா மயக்கமாகி விழுகிறான்.]

9. ஆரியரும், அநாரியரும்

[அத்வைத சரண சட்டோ பாத்யாரும், சிந்தாமணி குண்டுவும்]

அத்வைத : யாரப்பா நீ?

சிந் : நான் ஆரியன். ஹிந்து.

அத் : பெயரென்னவோ?

சிந் : ஸ்ரீ சிந்தாமணி குண்டு.

அத் : வந்த காரணம் என்னவோ?

சிந் : தங்கள் பத்திரிகையில் எழுத விரும்புகிறேன்.

அத் : என்ன எழுதுவீர்கள்?

சிந் : நான் ஆரியன். ஆரிய தர்மம் பற்றி எழுதுவேன்.

அத் : ஆரியம் என்ருல் என்ன ஐயா!

சிந் : [வியப்புடன்] ஆரியம் என்ருல் தெரியாதா! நான் ஆரியன். என் தகப்பஞர் ஸ்ரீ நகுட்குண்டு ஆரியர் அவருக்குஅப்பா காலம் சென்ற ஸ்ரீ நபர் குண்டு ஆரியர். அவருடைய...

அத் : புரிகிறது. உங்கள் மதம் என்ன!

சிந் : சொல்வது கடினந்தான். சுருக்கமாகச் சொல்லப் போனல் அநாரியருடைய மதம் எங்கள் மதமல்ல.

அத் : அநாரியரா? அவர்கள் யார்?

சிந் : ஆரியரல்லாதவர்தான். நான் அநாரியனல்ல. என் தந்தை ஸ்ரீநகுட் குண்டு. அநாரியரல்ல; அவர் தந்தை...

அத் : போதும். அதுவே போதும். ஸ்ரீ நகுட்குண்டு என் தகப்பஞரல்ல. ஸ்ரீ நபர் குண்டுவுக்கும் எனக்கும்

ஒருவித உறவும் இல்லை. ஆகவே நான் அநாரியன். இது தானே நீ சொல்வது!

சிங் : அதைப் பற்றி என்னால் உறுதியாகச் சொல்ல முடியாது?

அத் : [கோபத்துடன்] என்ன சொன்னாய்? உறுதி யாகச் சொல்ல முடியாதா! நகுட் குண்டு என் தகப் பனரல்ல என்று உறுதியாகச் சொல்ல முடியாதா? நீ எந்த ஜாதியைச் சேர்ந்தவனோ! உனக்கும் எனக்கும் என்ன சம்பந்தம்?

சிங் : ஜாதியைப் பற்றி அல்ல நான் சொன்னது! வம்சத்தைப் பற்றித்தான் சொல்கிறேன். நீங்களும் உலகப் பிரசித்தி பெற்ற ஆரிய வம்சத்தைச் சேர்ந்தவர்.

அத் : உன் அய்யா நகுட்குண்ட் பிறந்த வம்சத்தில் நானும் பிறந்தவன் என்கிறாயா! வேளாளர் குலத்தில் பிறந்த உனக்கு இத்தனை துணிச்சலா!

சிங் : நீங்கள் அநாரியராக இருக்கலாம். ஆனால் நானும் என் தகப்பனாரும் ஆரியர்கள். பரிதாபம் எங்கள் முன்னோர்களான ரிஷிகள் காசியபர், ப்ருகு, பரத்து வாசர்.

அத் : யாரடா இவன் ஒருத்தன்! காசியபர் எங்கள் முன்னோர். காசியப கோத்திரத்தில் பிறந்தவன் நான். உங்கள் முதாதையர் காசியபர், பரத்துவாசர் பிருகு என்கிறாயே! என்ன இது!

சிங் ; அதெல்லாம் எனக்குத் தெரியாது. உங்க ளுடன் இது விஷயமாக வாதம் செய்யவும் நான் வர வில்லை. இந்த மாறுதல்கள் எல்லாம் ஆங்கிலம் படித்த தன் விளைவுதான்.

அத் : நீங்கள் ஆங்கிலம் படிக்கவில்லையா?

சிங் : இல்லை. அந்தக் குறையை ஏன் சொல்லிக் காட்ட வேண்டும்! இயல்பான ஆரிய ரத்தம் துடிக்க,

நான் சிறு வயதிலேயே பள்ளிக்கூடத்தை விட்டு ஓட்டம் எடுத்தவன்.

[ஹரிஹர பாபுவும் இன்னும் சில எழுத்தாளர்களும் வருகிறார்கள்]

அத் : வாருங்கள், வாருங்கள். கட்டுரைகள் தயாராகி விட்டனவா!

ஹரி : இதோ எல்லாம் தயாராக இருக்கின்றன.

சிங் : எதைப் பற்றி எழுதியிருக்கிறீர்கள்?.

ஹரி : பல விஷயங்கள் இருக்கும்.

சிங் : ஆரியரைப் பற்றி ஏதாவது எழுதி இருக்கிறீர்களா?

ஹரி : இல்லை.

சிங் : ஆரியர்களின் விஞ்ஞான அறிவைக் குறித்து...

ஹரி : ஐரோப்பியர்தான் ஆரியர்கள்; அவர்கள் விஞ்ஞான அறிவு...

சிங் : ஐரோப்பியர் மிகவும் தாழ்ந்த இனத்தவர். 'விஞ்ஞானத்தில் நமது முன்னோர்களுடன் ஒப்பு நோக்கினால் அவர்களை மூடர்கள் என்றே சொல்லலாம். அதை என்னால் நிரூபிக்க முடியும். இப்போதும் ஆரிய வம்சத்தவர் எண்ணெய் தடவிக் கொள்வதற்கு முன் அச்வத்தாமாவை நினைத்து மூன்று முறை தரையில் எண்ணெயைச் சொட்ட விடுவார்கள். ஏனென்று உங்களுக்குத் தெரியுமா?

ஹரி : தெரியாது.

சிங் : உங்களுக்கு?

அத் : தெரியாது.

சிங் : உங்களுக்குத் தெரியுமா?

எழுத்தாளர் ஒருவர் முதல் எழுத்தே தெரியாது.

சிங் : இதுகூடத் தெரியாவிட்டால் விஞ்ஞானம் பற்றி ஏன் பேச வருகிறீர்கள்! கொட்டாவி விடும்போது

ஆரியர் வாய்க்கு எதிரே சிட்டிக்கை போடுவது ஏன் தெரியுமா ?

[எல்லாரும்: ஒரே குரலாக] எங்களுக்குத் தெரியாது.

சிங் : பின் என்ன ! நமது ஆரியப் பெண்கள் விசிறும்போது விசிறி உடம்பில் தவறித் தீண்டிவிட்டால் தரையில் ஒரு முறை தட்டுகிறார்கள். அதற்காவது காரணம் சொல்லுவீர்களா ?

எல்லாரும் : தெரியாது.

சிங் : இதோ பாருங்கள். இந்த விஷயங்களை யெல்லாம் ஆராயாமல், எண்ணிப் பார்க்காமலேயே ஐரோப்பிய விஞ்ஞானம் உயர்வானது என்கிறீர்கள். ஆரியர்கள் தும்மக் காரணம் என்ன ; கொட்டாவி விடக் காரணம் என்ன ; எண்ணெய் எதற்குப் பூசிக்கொள்ள வேண்டும் ; இதெல்லாம் ஒன்றும் தெரியாது உங்களுக்கு

ஹரி : சரி, நீங்களே சொல்லுங்கள். எண்ணெய் தடவிக் கொள்ளுமுன் தரையில் எண்ணெய்ச் சொட்டு விடக் காரணமென்ன ?

சிங் : மாக்னடிஸம் [காந்த சக்தி]. வேறு ஒன்று மல்ல. இங்கிலீஷில் மாக்னடிஸம் என்று சொல்லுகிறார் களே, அதுதான்.

ஹரி : [வியப்புடன்] நீங்கள் மாக்னடிஸம் பற்றி இங்கிலீஷ் விஞ்ஞான சாஸ்திரம் படித்திருக்கிறீர்களா ?

சிங் : இல்லை. அவசியமில்லை. விஞ்ஞானமோ வேறு எந்த சாஸ்திரமோ படிக்க ஆங்கிலம் தேவை யில்லை. நமது ஆரியர்கள் என்ன சொல்கிறார்கள் தெரி யுமா ? பிராண சக்தி, காரண சக்தி, தாரண சக்தி என்று மூன்று சக்திகள் உண்டு. அதற்குமேல் எண்ணெயின் சாதாரண சக்தி கலந்து குளிப்பதற்கு முன்னர் நமது உடலினுள் ஒருவித, பௌதிக காரண சக்தியை எழுப்பு கிறது. பத்தொன்பதாம் நூற்றாண்டில் இங்கிலீஷ்காரர்

குளித்த பின்னர் உடலைத் துவாலையினால் துவட்டிக் கொள்வது உங்களுக்குத் தெரியும். அதற்கு எத்தனையோ ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே ஆரியர்கள் உடலைத் துவட்டத் துண்டுகளை உபயோகித்தார்கள் என்று கவனியுங்கள்.

எழுத்தாளர்கள் : [வியப்புடன்] ஆச்சரியம்! ஆரியர்களின் விஞ்ஞான அறிவுதான் எவ்வளவு! ஆரியர் குண்டு மஹாசயரின் ஆராய்ச்சிதான் எவ்வளவு!

ஹரி : [தனக்குள்] நல்ல முட்டாளின் கையில் சிக்கிக்கொண்டோமப்பா! ஆனால், இவனுக்குக் கோபமூட்டக்கூடாது! பல பத்திரிகைகளில் எழுதுகிறவன் இந்த ஆரியக் குண்டன். பெரிய மனுஷ்யர்களையெல்லாம் திட்டுவானாம். அதற்குத்தான் பெயர் போனவனென்று கேள்வி.

சிங் : இதோ பாருங்கள். அந்த ஆரியப் பிராமணர் விடியலில் பூப்பறிக்கக் காரணமென்ன, சொல்லுங்கள்.

அத் : பூஜையின்போது கடவுளுக்குப் போடத்தான்.

சிங் : சீச்சீ! நீங்கள் எதையும் ஆழ்ந்து கவனிப்பதில்லை. காலையில் பூப்பறிப்பதை ரிஷிகள் அனுமதித்ததன் காரணம், காற்றில் ஆக்ஸிஜன் இருப்பது அவர்களுக்குத் தெரிந்திருந்ததனால்தான். அது தெரியுமென்றால், காற்றிலுள்ள மற்ற வாயுக்களையும் அவர்கள் அறிந்து கொண்டிருக்க வேண்டும். இதில் சந்தேகமென்ன இருக்கிறது! இப்படி ஒவ்வொன்றாக நிரூபித்துவிட முடியும், ஐரோப்பிய விஞ்ஞான சாஸ்திரங்கள் அவர்களுக்குத் தெரிந்தவைதான் என்பதை. கொட்டாவி விடுகையில் சிட்டிக்கை போடக் காரணம் என்ன! அதுவும் காந்த சக்தி, எழும் காற்றுடன் ஆதான சக்தி கலந்து பௌதிக சக்தியால் கிளம்பிய நிதான சக்தி தன் வன்மையால் பிராண, காரண, தாரண சக்திகளைக் கடந்து முன்னேறும்

போது ஸத்வம், ரஜஸ், தமஸ் இம் மூன்று குணங்களுக்கும் மாருட்டம் உண்டாகிறது. இந்தச் சமயத்தில் நடு விரலையும் பெரு விரலையும் சேர்த்துத் தேய்ப்பதால் உண்டாகும் வாயுவின் உஷ்ணத்தால் உண்டான நரம்புச் சூடு சூரிய உஷ்ணத்துடன் கலந்து ஜீவ நாடியின் உள்ளே பௌதிக மாறுதல்கள் நேராமல் தடுக்கிறது. இதை விஞ்ஞானம் என்று சொல்லாமல் எதைச் சொல்வது! முன்னோர்கள் டார்வினின் எந்த நூலையும் படித்தவர்கள் அல்ல.

எழுத் : என்ன ஆச்சரியம்! ஆரியர்களின் பெருமை தான் என்னே! இத்தனைக் காலம் நமக்கு இது புரியாமல் இருந்ததே !

ஹரி : [தனக்குள்] எனக்கோ இன்றும் புரியாமல் தான் இருக்கிறது.

சிந் : தரையில் விசிறியைத் தட்டுவதும்கூட மாக்னடிஸந்தான். ஸம்ப்ரஸாரணம், நிஸ்ஸாரணம், விப்ரகர்ஷணம், நிகர்ஷணம் என்கிற பௌதிகக் கிரியைகள் கலந்து...

அத் : போதுமப்பா, போதும். எனக்குத் தலை சுற்றுகிறது. விசிறியைத் தட்டுவது பற்றி என் பத்திரிகையில் எழுதுங்கள். இதுவரை நிரம்ப நேரம் பேசி விட்டீர்கள். வெற்றிலை கொண்டுவரச் சொல்லட்டுமா?

சிந் : இல்லை. உங்களிடம் நான் வெற்றிலை போட்டுக்கொள்வது நடக்காது. நீங்கள் ஆரியர்களின் கடமைகளைப் பின்பற்றுவதில்லை. எங்கள் ஆர்ய நாடியில் வாழையடி வாழையாக ஓடும் அத்யாத்மிக சக்தி...

அத் : ஸார் கிடக்கிறது. வெற்றிலை வேண்டாம். பரவாயில்லை. ஹுக்கா வேண்டுமானால் கொண்டுவரச் சொல்லட்டுமா !

சிந் : ஹுக்காவா! அது பின்னும் மோசமான தாயிற்றே! உயர்ந்த இனத்தவர் தாழ்ந்தவருடைய

ஹுக்காவை உபயோகிப்பதா! ஒரு சாதியர் மற்ற சாதியினர் தொட்ட அன்னத்தை ஏன் உண்பதில்லை? முன்பு ஆரியர் அநாரியரின் நிழலைக்கூட மிதிக்க மாட்டார்கள்! அதில் விஞ்ஞானம் இல்லையா? நிச்சயம் உண்டு. நான் எடுத்துச் சொல்கிறேன். அதுவும் காந்த சக்திதான். உத்தம, மத்யம, அதமமென்று மூவித விகிரண சக்திகள் உடலில் எழுகின்றன ..

அத் : போதும் போதும். ஹுக்காவும் வேண்டாம், வெற்றிலை, புகையிலை எதுவும் தேவையில்லை உங்களுக்கு. உங்களுக்கு எது தேவையோ, உங்கள் உடலின் சக்தி குறையாதவாறு செய்து கொள்ளுங்கள்.

எழுத் : ஆனால் அத்வைத பாபு! நீங்கள் குண்டு மஹாசயரின் கருத்துப் பொதிந்த சொற்களைக் கேட்க விடாமல் தடுக்கிறீர்களே!

முதல் : [இரண்டாமவனை நோக்கி] குண்டு மஹாசரியன் பேச்சில்தான் எவ்வளவு யுக்தி! எவ்வளவு ஆழ்ந்த அறிவு! ஆனால் எதாவது உனக்குப் புரிந்ததோ?

இரண் ; இல்லையப்பா, எதுவும் விளங்கவில்லை. நன்றாகக் கேட்டு விடலாம். சரி, ஸார்! நீங்கள் தாரண காரணமென்று என்னென்னவோ சக்திகள் சொன்னீர்களே, அவை என்னவோ?

சிந் : அவை வேறு ஒன்றுமல்ல; இங்கிலீஷில் Force [சக்தி] என்று குறிபிடுவதுதான்; அதாவது மாக்னடிஸம்.

எழுத் : [ஒரே குரலாக] ஓ! புரிகிறது.

ஹரி : இல்லை. எனக்கு இன்னும் ஒன்றும் விளங்கவில்லை.

எழுத் : [வெறுத்து] புரியவில்லையா! மாக்னடிஸம்-FORCE – சாதரணமான விஷயம். மாக்னடிஸம் தெரியுமல்லவா. FORCE–ம் தெரிந்ததுதான். ஆரியர்களின் விஞ்ஞான ஆராய்ச்சி மிகவும் தீவீரமானதுதான்.

மு. எ : இதெல்லாம் தெளிவாகப் புரிய வேண்டு மென்றால் பல சாஸ்திரங்களைக் கரைத்துக் குடித்திருக்க வேண்டும். குண்டு மஹாசயர் பல சாஸ்திரங்களைக் கற்றுத் தேர்ந்திருப்பார் என்று நினைக்கிறேன்.

சிந் : இல்லை. சாஸ்திரம் நான் படிக்கவில்லை. நான், என் தந்தை, என் பாட்டனார் எல்லாமும் ஆரியர்கள். ஆகவே சாஸ்திரம் படிப்பது அநாவசியம் என்று கருதுகிறேன்.

இ. எ : அது சரி. ஆனால் விஞ்ஞானம் நீங்கள் நன்றாகப் படித்துத்தான் இருக்கவேண்டும்.

சிந் : இல்லை. என் சிந்தனா சக்தியின் மகிமையால் ஆரியர்களின் தும்மல், சிட்டிக்கை, இருமல், விரல் நொடித்தல் முதலிய ஆசார வழக்கங்களைப் பற்றி நுட்ப மான விஞ்ஞான தத்துவங்களை ஆராய்ச்சி செய்திருக் கிறேன். எனக்கு விஞ்ஞானப் படிப்பும் தேவையில்லை. நீங்கள் சொன்னால் நம்ப மாட்டீர்கள். ஆனால் ஆரிய சாஸ் திரங்களின்மேல் ஆணையிட்டுச் சொல்கிறேன், ஆரிய சாஸ்திரமோ, விஞ்ஞானமோ எதையும் நான் படிக்க வில்லை. என் வித்தையெல்லாம் சொந்த சிந்தனா சக்தியின் விளைவினால் எழுந்ததுதான்.

ஹரி : நீங்கள் ஆணையே யிட வேண்டியதில்லை. படித்தவர் என்ற பழியை உங்கள் மேல் எவருமே சுமத்த மாட்டார்கள்!

10. ஒரே குடும்பம்

[தௌலத் சந்திரனும், காஞயியும்]

தௌலத் : இதயம் இப்படிப் பற்றி எரிகிறபோது சர்க்கார் தீயணைக்கும் எஞ்சின் வந்தால் கூட அதை அணைக்க முடியாது. கூட்டுக் குடும்பமாக இருக்கும் வழக்கத்தைப் பற்றி கூட்டத்தில் வெகுவாகப் பேசிவிட்டேன்; சபைத் தலைவரும் தூங்கிவிடவே என்னைத் தடை செய்ய எவருமே இல்லை. கடைசியில் இரண்டு பசங்கள் என்னைக் கையைப் பிடித்து இழுத்து உட்கார வைத்ததுகள். அன்று எனக்கு அத்தனை ஆவேசம் எழுந்திருந்தது.

கா : இருக்காதா பின்னே! நீங்கள் என்ன சொன்னீர்கள்?

தௌ : சுயநலத்தை விட்டு விடுவதற்கு ஒரு நல்ல வழி கூட்டுக் குடும்பந்தான். பிறருடைய சொத்திலேயே வாழ்க்கை கழியும் போது அங்கு தன்னலம் என்ற பேச்சுக்கே இடமில்லையே! பத்திரிகைகளில் எல்லாம் என் பிரசங்கம்தான். அவர்கள் எல்லாம் ஒரே பேச்சாகச் சொல்வது இதுதான், பாவம், தௌலத் பாபுவுக்கு குடும்பமென்பது இல்லை. அவர் ஒன்றியாள். [பெருமூச்சு]

[ஜயநாராயண் வருகிறார்]

ஜய் : வெற்றி, அப்பனே! நான் உன் அத்தை புருஷன்.

தௌ : அதென்ன, எனக்கு அத்தையே கிடையாதே!

ஜய் : ஆமாம், ஆமாம். அவள் போய் வெகு காலமாகிறது.

தௌ : அத்தை என்று எனக்கு யாரும் எந்தக் காலத்திலும் இல்லையே!

ஜய் : [சிரித்து] அதென்னப்பா அப்படிச் சொல்லுகிறாய்! நான் பின் உனக்கு எப்படி அத்தை புருஷனாவேன்!

[காளுயியை நோக்கி]

நீங்கள் சொல்லுங்களேன்!

கா : ஆமாம், உண்மையே.

தௌ : சரி, சரி. தங்கள் வருகைக்கு என்ன காரணமோ?

ஜய்: அப்படி விசேஷமான காரணம் எதுவும் இல்லை. நாம் தனியாக இருக்கிறோமே என்று பத்திரிகைகள் திட்டியதாகக் கேள்விப் பட்டேன். அதனால்தான் ஒன்றாக இருக்க வேண்டுமே என்று வந்தேன்.

தௌ : உங்களுக்குச் சொத்து இருக்கிறதா?

ஜய் : ஒன்றுமில்லை. ஒரு தொல்லையும் இல்லை. ஒரு சங்கடமும் கிடையாது. சிற்றப்பா பிள்ளை ஒருத்தன் தான் இருக்கான். அவனும் கூட இதோ வந்து விடுவான்.

தௌ : அப்படியா! அவனுக்கு ஏதாவது சொத்து உண்டா?

ஜய் : ஒரு தொல்லையும் இல்லை. இரண்டு பெண்டாட்டிகளும், நாலு குழந்தைகளும்தான். அவர்கள் கூட வந்து விடுவார்கள். இதற்குள் வந்தாகி இருக்கும். கிளம்பும்போது இரண்டு பெண்டாட்டிகளும் தலைமயிரைப் பிடித்து இழுத்துக்கொண்டு சண்டை போடத் தொடங்கி விட்டார்கள். அதனால்தான் தாமதம்.

தௌ : காளுயி, என்னப்பா செய்யலாம்?

ஜய் : நீ ஒன்றும் செய்ய வேண்டாம், அவர்களாகவே வந்து விடுவார்கள். கவலை எதற்கு? இதற்குள் கவலைப்பட ஆரம்பிக்காதே! இன்று சாயங்காலத்திற்குள் வந்து விடுவார்கள்.

[ராமசரணன் வந்து தௌலத் பாபுவைக் கீழே விழுந்து வணங்குகிறான்.]

ராம ; மாமா! உங்கள் பேச்சைக் கேட்டு எனக்கு ரொம்பவும் தலையிறக்கமாகி விட்டது.

தௌ : யாரடாப்பா நீ? எங்கு வந்தாய்?

ராம : நான் உங்கள் தங்கை மகன் ராமசரணன். ஸ்டேஷனில் அம்மாவையும் ஒரு மூட்டையையும் விட்டு விட்டு வந்தேன். ஆளை அனுப்புங்கள்.

தௌ : இங்கு எதற்கு வந்தாய்?

ராம : தங்குவதற்குத்தான்.

தௌ : தங்க வேறு இடம் இல்லையா?

ராம : இருக்கிறது. ஆனால் அங்கெல்லாம் சுய நலத்தை விட்டு விட்டு இருக்க வசதி இல்லை.

தௌ : [பயத்துடன்] காமினி!

காமினி : உங்கள் புத்திமதியை அவன் உறுதியாகக் கடைபிடிக்க ஆரம்பித்தபின் அவனை அசைக்கவே முடியாது போலிருக்கிறது.

[நிதாயி வருகிறான்]

நி : அண்ணா! வேலையை விட்டுவிட்டேன். இல்லாவிட்டால் உனக்குத்தானே அவமானம்! யாரடா அங்கே? சட்டென்று இரண்டு இளநீர் கொண்டுவா. ரொம்ப தாகமாக இருக்கிறது.

[நகேர் சந்திரன் வருகிறான்]

ந. சந்திரன் : இந்தா சித்தப்பா! என் சுய நலத்தை எல்லாம் தியாகம் செய்துவிட வந்திருக்கிறேன். இதோ என் உடைந்த பெட்டி, ஹுக்கா. இதோ பூனைக் குட்டி. இதில் முதல் இரண்டும் பிதிரார்ஜிதம். மூன்றாவதுதான்

சுயமாகச் சம்பாதித்தது. இனிமேல் என்மேல் தப்பில்லை. உன்னோடேயே ஒட்டிக் கொண்டிருப்பேன்.

[தையல்காரன் வருகிறான்]

தௌ : நீ யாரப்பா, எனக்கு என்ன உறவு நீ?

தை : நான் தையல்காரன், சாமி! உங்கள் உடம்பை அளவு எடுக்க வந்திருக்கிறேன்.

தௌ : இப்போது வேண்டாம், நீ போ அப்பா! ரொம்ப முண்டயான சமயம். துணி தைக்க முடியாது.

ந : சாயபு! எங்கே போகிறாய்? என் அளவு எடுத்துக் கொள். சித்தப்பா போட்டுக் கொண்டிருக்கிறாரே பூப்போட்ட சட்டை, அதைப் போல் எனக்கு ஆறு ஜதை இருந்தால் போதும். நன்றாகத் தைத்துக் கொடுத்தால் சித்தப்பா சந்தோஷமாகத் தருவார் கூலி. தெரிந்ததா, சாயபு!

தை : சரிங்க. [அளவு எடுக்கிறான்]

[ஒரு சிறுவனுடன் பரேசநாத் வருகிறார்]

பரேச் : [தௌலத்தை வணங்கி, சிறுவனை நோக்கி] உன் பெரியப்பாவை நமஸ்காரம் பண்ணுடா. அண்ணா, இவன்தான் உங்கள் தம்பியின் பிள்ளை.

தௌலத் ; என் தம்பி பிள்ளையா?

பரேச் : ஆமாம். தம்பி பிள்ளையேதான். என்ன அப்படி நின்று விட்டீர்கள்? இதற்கு நிரூபணம் வேறு வேண்டுமா! உங்கள் தம்பி பிள்ளைதான் இவன்.

கானு : உங்கள் பிள்ளை என்ன பண்ணுகிறான்?

பரேச் : நானே பாடம் சொல்லிக் கொடுத்தேன். அ, ஆ, முடிந்து இ, ஈ வரைக்கும் வந்து நின்று விட்டது. பார்த்தேன், தௌலத் அண்ணா இருக்கும் போது படிப்பு எதற்கு? குறில் நெடில் கூடத் தெரியாத பிள்ளைக்கு அப்பனும், பெரியப்பனும் ஒன்றுதானே! எப்படி நான் சொல்வது?

கானு : ஆமாம், ஒன்றுதான்.

பரே : அண்ணு சொன்னுரே! தன் பசியை மதிக்காமல் பிறருடைய பசியைத் தீர்ப்பது ஒரே குடும்பமாக இருந்தால்தான் முடியும். அதைக் கேட்டேன். இந்தச் சுகம் அண்ணுவுக்குக் கிடைக்கவில்லை போலிருக்கிறது. கிடைத்திருந்தாலும் மறந்திருக்கும். அதனுல்தான் பாவம், என்று பிள்ளையுடன் இங்கே வந்து விட்டேன். இவன் வயிற்றுக்குள் பெருச்சாளிதான் இருக்க வேண்டுமென்று நினைக்கிறேன்.

[நடவரன் வருகிருன்]

நட : [தௌலத்தின் காதைத் திருகி] என்ன சௌக்யமா மாப்பிள்ளை! மச்சினன் இல்லை என்று கூட்டத்தில் அழுது தீர்த்து விட்டாயாமே!

தௌ : யாரடா நீ, திமிர்ப் பிடித்தவன்! பெரிய மனிதர் காதில் கை வைப்பதைப் பார்.

நட : தங்கை புருஷன் காதைத் திருகக் கூடாதா! இதற்குக் கூலி ஆளைத் தேடவேண்டுமா! என்ன! என்ன சொல்கிறீர்கள்?

கானு : சரிதான் நீங்கள் சொல்வது.

தௌலத் : என்னப்பா கானுயி! எனக்கு மனைவியே இல்லை, மச்சினன் எங்கே முளைத்தான்?

நட : உனக்கு மனைவி இல்லை என்றுல் வேறு யாருக்குமே இல்லையா! யோசித்துப் பாரேன்.

தௌ : எத்தனையோ பேர்களுக்கு மனைவிகள் இருக்கலாம். அதில் யோசிக்க என்ன இருக்கிறது?

நட : [சிரித்து] பின்னே!

தௌ : [கோபத்துடன்] பின்னே என்னவாம்! நீ எனக்கு எப்படி மச்சினன் முறை? அதைச் சொல்லு.

நட : ஏன், அண்ணன் உறவில் அண்ணு இல்லையா உனக்கு? மச்சினனை வேண்டுமானுல் தள்ளலாம். அண்ணனைக்கூட விழுங்கி விடுவாயா என்ன!

தௌ : எனக்கு ஒன்றுமே தெரியாது. ஆனல் இன்று நடப்பதைக் கவனித்தால்...

நட : போகிறது. உன் விசாரணை முடிந்தது. வீணுக என்ன பேச்சு. பெரிய மனிதர்கள் முன்னுல் எவன் மச்சினன், எவன் மச்சினன் இல்லை என்று வீண் வாதம் எதற்கு? நன்ருகவே இல்லை.

[தௌலத்தின் முதுகுப்புற மிருந்த
தலையணையை இழுத்துக்கொண்டு]

அப்பாடா! கொஞ்சம் களைப்பாறலாம். அடே! ஒரு ஹுக்கா கொண்டுவரச் சொல்லு.

[பழங்கள், பலகாரத்துடன்
வேலையாள் வருகிருன்]

வேலை : [தௌலத்திடம்] உங்கள் பலகாரம்!

தௌ : [கோபத்துடன்] தடியா! உன்னை இங்கே யார் கொண்டுவரச் சொன்னது? வீட்டினுள்ளே. கொண்டு போ!

பரேச் : அடடா! அதில் தவறு என்ன?

[வேலையாளை நோக்கி]

அடே அதை இப்படிக் கொண்டா...

[தட்டை வாங்கிக் கொண்டு தின்னத்
தொடங்குகிருர்]

[இரண்டு பக்கம் இருவராக விதுபூஷணனின்
தலை மயிரைப் பிடித்துக்கொண்டு
இரண்டு பெண்கள் நுழைகிருர்கள்]

முதல் : நீ பாழாய்ப் போக! உனக்குச் சாவு வராதா!

தௌ : [பரபரப்புடன்] இவர்கள் யார்?

ஜய் : பரபரப்படையாதே! நான் சொன்னேனே, என் சித்தப்பா பிள்ளை, அவனேதான்.

முதல் : தடியன், கையாலாகாத முண்டம்!

இரண் : எடு துடைப்பைக் கட்டையை!

தௌ : அப்பா காணுயி !

கா : பொறுமையைக் கற்றுக் கொள்ள இதை விட வேறு நல்ல வழி இல்லே.

முதல் : கிழத்துக்கு புத்திமாருடிப் போச்சு.

இரண் : எத்தனையோ பேருக்கு புருஷர்கள் சாகிருர்கள். உன்னை ஏனே அந்த யமன் மறந்து விட்டான் !

தௌ : அம்மா ! கொஞ்சம் சாந்தமாக இருங்கள்.

இருவரும் : சாந்தமா ! நீ கிட போய். உன் ஏழு தலைமுறைகள் அடங்கிச் சாகட்டும்.

தௌ : காணுயி !

கா : வீடு நிறைந்து விட்டது.

தௌ : இல்லையப்பா! என் தலையெழுத்து நிறைந்து விட்டது என்று சொல்...

கா : அது எப்படியோ ! இனி நான் அவசியமில்லை. போகிறேன்.

[போகிருன்]

தௌ : [உரக்க] காணுயி ! என்னைத் தனியேவிட்டு எங்கே போகிருய் ?

எல்லாருமாக : [தௌலத்தைப் பிடித்து] தனியாகவா ? நாங்கள் எல்லாரும் இருக்கிரேம். ஒருத்தரும் நகரமாட்டோம்.

தௌ : என்னது ?

எல்லா : ஆமாம். உன்னைத் தொட்டுச் சொல்லுகிரேம். ஓர் அடிகூட நகரமாட்டோம்!

11. தீர விசாரணை

[சண்டீ சரணன், கேவல்ராம்]

கேவல்: என்ன ஸார், எப்படி இருக்கிறீர்கள்?

சண்டீ: எப்படி இருக்கிறீர்கள் என்பதன் அர்த்தம் என்ன?

கேவல்: அதாவது சுகமாக இருக்கிறீர்களா?

சண்டீ: சுகம் என்றால் என்ன?

கேவல்: நான் கேட்க வந்தது உங்களுக்கு உடம்பு ஒன்றுமில்லையா என்று...

சண்டீ: அப்படியானால் சரியாகக் கேளேன். என் உடம்பு எப்படியிருக்கிறது என்றுதானே கேட்கிறாய்! பின் ஏன் நான் எப்படி இருக்கிறேன் என்று கேட்டாய்! நான் எப்படி இருக்கிறேன் என்பதும், என் உடம்பு எப்படி இருக்கிறது என்பதும் ஒன்றாகி விடுமா! நான் யார் என்பதைச் சொல்லு முதலில்.

கேவல்: நீங்கள் சண்டீசரண் பாபு.

சண்டீ: அது விஷயமாக வாதங்கள் எழக் காரணம் இருக்கிறது.

கேவல்: வாதம் எதற்கு! நீங்கள் உங்கள் தகப்பனாரைக் கேட்டுப் பாருங்களேன்.

சண்டீ: பெயர் என்பது என்ன? எதைக் குறிப்பது?

கேவல்: [யோசனை செய்தபின்] மனிதனை அறிமுகப் படுத்தவே...

சண்டீ: மனிதனுக்கு மட்டும்தான் பெயர் இருக்கிறதா? மற்றப் பிராணிகளுக்குக் கிடையாதா?

கேவல் : சரியாகச் சொன்னீர்கள். மனிதன், மற்றப் பிராணிகள்...

சண்டீ : மனிதன், மற்ற உயிரினங்களைத் தவிர வேறு எதற்கும் பெயர் இல்லையா? அப்படியென்றால் ஒரு பொருளை அறிய வழி எது ?

கேவல் : உண்மைதான். மனிதன், பிராணிகள், மற்றப் பொருள்கள் ..

சண்டீ. சுவை, ஒலி, நிறம் போன்ற பொருளல்லாதவற்றுக்கும் பெயர் உண்டல்லவா ?

கேவல் : அதுவும் சரிதான். மனிதன், பிராணி, பொருள் ; மற்றும் சுவை, ஒலி, நிறம் போன்ற பொருளல்லாதவை...

சண்டீ : இன்னும்...

கேவல் : இன்னும் என்ன !

சண்டீ : நமது மனது, இதயம் இவற்றின் போக்கு...

கேவல் : நமது மனம், இதயம் இவற்றின் போக்கு...

சண்டீ : உள்ளும் புறமும் நிகழும் பலவேறு மாறுதல்கள், பல்வேறு நிலைகள்...

கேவல் : பல்வேறு மாறுதல்கள், பல்வேறு நிலைகள்...

சண்டீ : அப்புறம்...

கேவல் : [பரிதாபமாக] அப்புறம் என்பதைவிட்டு, இதைப் போல் மற்றும் பல என்று முடித்து விடலாமே !

சண்டீ : சரி. நல்லது. இப்போது விஷயம் என்ன ? தெளிவாகச் சொல்லிவிடு, பார்க்கலாம்.

கேவல் : [தலையைச் சொரிந்தவாறு] தெளிவாக இருக்குமோ, இராதோ தெரியாது. முயன்று பார்க்கிறேன். பெயர் என்பது மனிதன், மற்றும் பொருளல்லாதவை...இல்லை, இல்லை. பொருள்கள், பொருளல்லாதவை...உள்ளும் புறமும் நிகழும் பலவித இதய

நிலைகள், இல்லை, மனதின் அலைகள்...இல்லை, இல்லை. பலவித மாறுதல்கள், நிலைகளின் பலவிதம்; இல்லை, சரியாக வரவில்லையே! சங்கடமாகிப் போச்சு. சரியாகச் சொல்ல முடியவில்லை. ஒரே பேச்சில் பெயர் என்பது மனிதன், பிராணிகள்...சரி, சரி. மனிதன், பிராணிகள் முதலியவைகளின் அறிமுகம் ஏற்பட வழி.

சண்டை: இதற்கும் வாதம் இருக்கிறது. அறிமுகம் என்றால் என்ன?

கேவல்: [கை கூப்பி] எனக்கு எதுவும் தெரியாது. நீங்களே சொல்லி விடுங்கள்.

சண்டை: பல பொருள்களின் வித்தியாசங்களை உணர்ந்து வெவ்வேறாகத் தெரிந்து கொள்வது சரிதானே!

கேவல்: இதைத் தவிர வேறாக இருக்க முடியாது.

சண்டை: அப்படியானால் இதற்கு நீ மறுப்புச் சொல்லவில்லையா?

கேவல்: இல்லை.

சண்டை: மறுத்தால் அது விஷயமாக வாதம் செய்யக் கூடும்.

கேவல்: இல்லை, இல்லை. நான் எதற்கும் மறுப்புச் சொல்லவில்லை.

சண்டை: இதை எதிர்ப்பதாக வைத்துக் கொள்...

கேவல்: [பயத்துடன்] மனதில்கூட என்னால் அப்படி எண்ண முடியவில்லையே!

சண்டை: நீ செய்யாமல் இருக்கலாம். மற்றவர்களுக்கு மறுப்பு இருக்கலாமல்லவா!

கேவல்: எவராலும் இதை மறுக்க முடியாது. அவ்வளவு துணிச்சல் யாருக்கு இருக்கிறது?

சண்டை: சரி. இதை ஒப்புக்கொண்டாய். அப்புறம் பெயர்தான் அறிமுகம் செய்து கொள்ளும் ஒரே வழி என்றால், என் அடையாளத்தைக் கொண்டு தெரிந்து கொள்ள முடியாதா? என் மற்ற லட்சணங்கள்...

கேவல்: பெயர் என்பதன் வாசனைகூட எனக்குத் தெரியாது என்று இன்று புரிந்து விட்டது. நீங்களே சொல்லி விடுங்கள்.

சண்டீ: மொழியின் மூலம் பொருள்களின் வேறுபாட்டைக் குறிக்கும் ஒரு செயற்கை ஏற்பாடுதான் பெயர் என்பது. மறுப்பு உண்டானால்...

கேவல்: இல்லை. நான் ஒப்புக் கொள்கிறேன்.

சண்டீ: வாதம் செய்யும் நோக்கத்துடன் மறுப்பாயானால் கூட...

கேவல்: வாதம் எதற்கு! எங்கள் தகப்பனே சொன்னால்கூட மறுக்க மாட்டேன்.

சண்டீ: இதில் ஒரு பாகங்கூட ஒப்புக்கொள்ளாமல்...

கேவல்: ஒரு எழுத்தைக்கூட நான் மறுக்கவில்லை...

சண்டீ: இதில் செயற்கை ஏற்பாடு என்றேனே அதை எடுத்துக்கொள்...அது விஷயமாகப் பல வாதங்கள்...

கேவல்: அதற்கு நேர் விரோதம். அதனால்தான் மற்ற வாதங்களுக்கே இடமிராமல் போயிற்று.

சண்டீ: சரி. வா! என் பெயர் என்னவென்று யோசிக்கலாம்.

கேவல்: [ஏமாற்றத்துடன்] நீங்களே ஆலோசனை செய்யுங்கள். எனக்குப் பசிக்கிறது.

சண்டீ: எனக்கு ஆயிரம் பெயர்கள் உண்டு. எதைக் கேட்கப் போகிறாய்!

கேவல்: உங்களுக்கு மிகவும் பிடித்தமானதைச் சொல்லுங்கள்.

சண்டீ: முதலில் எதனுடன் என் வேறுபாட்டைத் தெரிந்து கொள்ள விரும்புகிறாய் என்பது நிச்சயமாக வேண்டும்...பிராணிகளுடன் என் வேறுபாடு தெரிய...

கேவல் : இல்லை. அது வேண்டாம்...

சண்டை : அப்படியானால் நான் மனிதன் என்று பெயருள்ளவன். மஞ்சள், வெள்ளை நிறங்களுள்ள பொருள்களுடன் ஒப்பிட்டால் என் பெயர்...?

கேவல் : கறுப்பு.

சண்டை : மாநிறம். சிறுவனுடன் என்னை ஒப்பு நோக்கினால் என் பெயர்......?

கேவல் : கிழவன்.

சண்டை : நடுத்தர வயதினன்.

கேவல் : பின் சண்டைசரணன் என்ற பெயர் யாருக்கு ?

சண்டை : ஒரு மனிதனுள் மாநிறமான ஒரு குறித்த மனிதனுக்குள், முற்றிலும் நிறைவு பெற்ற ஒரு மனிதனுள் பிறவி முதல் இன்றுவரை நிகழ்ந்த பல மாறுதல்கள் சாவு வரைக்கும் இனி நிகழப் போகும் பல மாறுதல்கள் —இவைகளின் நடுவே உயிர்த்து நிற்கும் ஓர் ஒற்றுமையைத்தான் ஒரு சிலர், அதாவது அந்தச் சிலரின் உள்ளுணர்வு சண்டைசரணன் என்று குறிப்பிடுகிறது.

கேவல் : அடடா! ரொம்ப நேரமாகி விட்டது! எனக்கும் பசி தீவிரமாகிறது. உணவும் தயாராகிவிட்டது. நான்......

சண்டை : [கையைப் பிடித்துக்கொண்டு] இரு... விஷயம் இன்னும் முடிவாகவில்லையே! இப்போதுதானே முன்னுரை முடிவாயிற்று. நான் உடம்பு ஒன்றும் இராமல் இருக்கிறேனா என்று கேட்டாயே! நீ என்னைப் பற்றிக் கேட்கிற கேள்வியா, அல்லது என்னுள் இருக்கும் உயிரைப் பற்றிக் கேட்பதா? என்பதுதான் இப்போதைய பிரச்னை.

கேவல் : முதலில் எதைக் கேட்டேனோ, அதை இப்போது சொல்ல முடியாது! ஆனால் உங்களுடன் இவ்வளவு நேரம் பேசிய பின்னர், உயிர்த்து நிற்கும் உங்கள் உள்

ளுணர்வு எப்படி இருக்கிறது என்று கேட்கத்தான் நான் நினைத்ததாகத் தோன்றுகிறது.

சண்டீ : நிரம்பக் கஷ்டமான கேள்விதான்.

கேவல் : அப்படியானால் மன்னித்து விடுங்கள். தவறு செய்து விட்டேன். இப்போது அதற்காக அனுதாபம், பசியின் கொடுமை இரண்டுமாக என்னை வாட்டுகின்றன. இனிமேல் சாப்பிடுவதற்கு முன்னால் உங்களை நான் இந்த மாதிரியான கேள்விகளைக் கேட்கவே மாட்டேன்.

சண்டீ : [காதில் போட்டுக் கொள்ளாமல்] நான் சுகமாக இருக்கிறேனா என்றாயே! முதலில் சுகம், அசௌக்கியம் இரண்டும் என்னவென்று கவனிக்கலாம். அதன் பின்னர் என் வரைக்கும் சுகம் என்பதென்ன அசௌக்கியம் என்பது என்ன என்பதைத் தீர்மானிக்கலாம். அதற்குப் பின் இப்போது எது சுகம் என்பது...

கேவல் : ஐயா! உங்கள் காலைப் பிடித்துக் கொள்கிறேன். இப்போதைக்கு விட்டு விடுங்கள் அப்புறமாக, 'நீங்கள் எப்படி இருக்கிறீர்கள்?' என்ற கடினமான கேள்விக்குப் பதில் என்றைக்குச் சொல்ல முடியுமோ அந்த நாளைக் குறிப்பிட்டு விடுங்கள். எனக்கு அவசரம் ஒன்றுமில்லை. தாமதமானாலும் சரி, பதிலே கிடைக்காமல் போனாலும் ஒன்றுதான் எனக்கு. ஆனால் இன்று என் தவற்றை மன்னித்து விடுங்கள். இனிமேல் நானே எச்சரிக்கையாக இருப்பேன்.

12. தீராத தொல்லை

முதல் காட்சி

(நவகாந்தன்)

நவ : ஆகா! பிரேமையின் ரகசியத்தை எவரால் தான் ஊடுருவிக் காண இயலும்! ஓர் உள்ளத்தை மற்றொன்றுடன் பிணைக்கும் அந்த ரகசியம்தான் யாதோ! நிலவின் மயக்கம், மலர் மணத்தின் வசியம், மாமரங்களினூடே மொட்டுக்களின் நறுமணம் ஏந்திவரும் இளம் தென்றல்கூட அந்தப் பிணைக்கும் பணியில் ஈடுபடுகிறது என்றால்!

[நரோத்தமன் வருகிறான்]

நரோ : ஐயோ! இந்த நவகாந்தன் கையில் அகப்பட்டால் அவ்வளவுதான். ஏது! பிடித்துக்கொள்வான் போலிருக்கிறதே!

நவ : [நரோத்தமனைப் பிடித்துக்கொண்டு] அண்ணா! காதலின் தீவிர சக்தியை என்னவென்று சொல்வது!

நரோ ; பசியின் சக்தி அதைவிடத் தீவிரமானது. நான் சாப்பிட வேண்டும். என்னை விடு.

நவ : இதயப் பசி...?

நரோ : இதயமில்லை அப்பனே! வயிற்றுப் பசி. நான் சாப்பிட்டுவிட்டு வருகிறேன்.

நவ : சாப்பாட்டைப்பற்றி நான் சொல்லவில்லை.

நரோ : நீ ஏன் சொல்கிறாய்! சொல்வது நான்தான். கொஞ்சம் இரு. நான்.. அதோ ஆதிநாத பாபு வருகிறார். அவரைப் பிடித்துக் கொள். காதலின் சக்தியை உணர்

பவர் அவரைவிட வேறு யாரும் கிடையாது என்றே சொல்லலாம். [போகிறுன்]

[ஆதிநாத பாபு வருகிறுர்]

நவ : [அவரைப் பிடித்துக் கொண்டு] ஐயா! காதலின் தீவிர சக்தி ..

ஆதி : திவிரமா! அது என்னப்பா; தீவிரம் என்று சொல்ல வேண்டும்.

நவ : யோசித்துப் பாருங்கள். காதலுக்குப் படை பலம் இல்லே. துணை வலி இல்லே. இருந்தும் உலகையே வெல்லும் வல்லமை அதற்கு உண்டு. உயிருள்ள தனது...

ஆதி : உயிருள்ளதாக இருக்க முடியாது.

நவ : ஆம். அது உயிருள்ள...

ஆதி : அதைவிட உணர்வு என்று சொல்லலாம். நன்ருகப் பொருந்தும்.

நவ : உயிர் சக்தியின் வல்லமையிஞல் தன் பாதை யைப் படைத்து...

ஆதி : படைப்பல்ல. வகுத்துக் கொள்வது என்று சொல்.

நவ ; படைத்துக் கொள்கிறது. கதிரவனும் விண் மீன்களும் நிறைந்த...

ஆதி : படைப்பல்ல. வகுத்துக் கொள்கிறது என் பதுதான் சரி.

நவ : நீல நிறமான வெளி. மலர்கள் மண்டிய இயற்கையின் கோலம்...

ஆதி : வகுத்துக் கொள்கிறது என்ருல்...

நவ : மலர்க் குவைகள் குலுங்கும் நந்தவனம்!

[பேசிக் கொண்டே இருவரும் போகிருர்கள்]

(கணேசன் வருகிறுன்)

கணேசன் : கட்டுரையை முடித்தாயிற்று. யாருக் குப் படித்துக் காட்டுவது! கையில் கட்டுரையுடன் எங்கே போனலும் ஒருத்தரும் காணுேமே! இன்று யாருக்காவது

இதைப் படித்துக் காட்டியாக வேண்டும். தேடிப் போகலாம்.

இரண்டாம் காட்சி

(ஹரிசரணன், நவீனன், மாதவன், நரோத்தமன்)

ஹரி : இத்தனை நாட்களாகக் கவலையிராமல் இருந்தோம். ஒரு தொந்தரை இல்லை. இப்போது என்னப்பா செய்வது?

நவீ : என்ன செய்யலாம்?

நரோ : ஆமாமப்பா! ஏதாவது ஒரு வழி யோசித்தாக வேண்டும்,

ஹரி : இத்தனைக் காலமாக வீட்டில் இருந்தது இந்த நவகாந்தனின் தொல்லை ஒன்றுதான். அது சகித்துப் போய் விட்டது. இப்போது எங்கிருந்தோ ஓர் எழுத்தாளனும் வந்து சேர்ந்து விட்டானே!

நரோ : இனிமேல் இங்குத் தங்குவதில் பலனில்லை.

நவீ : நேற்று சாதி வேற்றுமை பற்றி ஒரு கவிதை எழுதி எனக்குப் படித்துக்காட்ட வந்தான்.

ஹரி : நேற்று இரவு மணி பத்தரை இருக்கும், அப்போதுதான் தூக்கம் கண்ணைச் சுழற்றியது. வந்து விட்டானப்பா இந்த எழுத்தாளன்! தூக்கம் போனது போக, நானும் அதன்பின்னுலேயே ஓடினேன், போயேன்.

நரோ: ஆமாமப்பா. நேற்று என்னிடங்கூட...அதோ வருகிருன்!

ஹரி : ஆமாம். அதோ வந்து விட்டான்!

நவீ : கையில் நோட்டுப் புத்தகம்!

ஹரி : நான் ஓடி விடுகிறேன் [போகிருன்]

நவீ : நான்கூட ஓட்டம் பிடிக்க வேண்டியதுதான் [போகிருன்]

நரோ : எனக்குப் பருமனை உடம்பு. இதைத் தூக்கிக்கொண்டு ஓட முடியாதே! என்ன செய்வது?

[கணேசன் வருகிருன்]

கணே : மூன்று கட்டுரைகள் !

நரோ : மணி என்ன ?

கணே : போ, யாருக்குத் தெரியும்? முதலாவது இந்தக் காலத்துப் பெண் இனத்தின்...

நரோ : ஐயா. கடிகாரம் இருக்கிறதா ? மணி என்ன வென்று...

கணே : என்னிடம் கடிகாரம் இல்லை. என் கட்டுரைகளில் ஒன்று...

நரோ : [உரக்க] அடே மோதோ ! என் ஆபீஸ் சட்டையை எங்கேயடா வைத்தாய் ?

கணே : கேளுங்கள் நரோத் பாபு ! ஒரு கட்டுரை இந்து மதத்தின்...

நரோ : [திரை மறைவில் நோக்கி] அதோ அதோ ! நாசம் ! குழந்தையல்லவா விழுந்து விட்டது !

[போகிருன்]

கணே : நேற்று முதல் நானுந்தான் பார்க்கிறேன். காக்கைக் கூட்டத்தில் கல் போட்டதுபோல் எல்லோரும் நழுவி ஓடுகிருர்களே ! முன்னிருந்த இடத்தில் ஓர் ஆள் கூட பாக்கி இல்லை என்றுதான் இங்கே வந்தேன். இங்கேகூட எவரும் சேர்ந்தாற்போல் இரண்டுமணி நேரம் உட்கார்ந்து கேட்கமாட்டேனென்கிருர்களே ! எப்படியும் நரோத் பாபுவைத்தான் பிடிக்க வேண்டும். ஆள் நல்ல மாதிரி. சற்றுப் பருமனுன சரீரம்; அவ்வளவு தான்.

மூன்ருவது காட்சி

[நரோத்தமன். நவகாந்தன்]

நவ : இதோ பாருங்கள், நரோத்தம பாபு ! இதயத்தின் இரகசியம்...

நரோ : இப்போது கிடக்கட்டும். ஆபீஸ் இருக்கிறது.

நவ : [பேருமுச்சுடன்] ஆமாம். உங்களுக்கு ஆபீஸ் இருக்கலாம். எனக்கு என்ன இருக்கிறது, சொல்லுங்கள். எனக்கு 'Occupation Gone. Othello's Occupation is Gone.'— ஷேக்ஸ்பியர் சொல்லுகிருர்...எங்கே போகிறீர்கள் ? இதைக் கேளுங்கள்...

நரோ : இல்லையப்பா! என்னை மன்னித்து விடு. துரைக்குக் கோபம் வந்தால் எனக்குக்கூட வேலை போய் விடும். அப்புறம்...

நவ : நான் சொல்ல வந்தது; இரு சாராரும்... இதைக் கேளுங்களேன். இரண்டு தரப்பினரும்...

நரோ : அதெல்லாம் எனக்குத் தெரியாது. இரு தரப்பினரின் வரலாறு எனக்கு ஒரே குழப்பமாகித் தலை சுற்றல் எடுத்து விட்டது.

நவ : நான் சொல்வதைக் கேட்காமலேயே பயப் படுகிறீர்களே! நான் சொல்வது வாதமல்ல. இதயத்தின் ஒலி! சாதாரணமான விஷயந்தான்.

நரோ : ஆனல் அந்தச் சாதாரண விஷயமே நாலரை மணி நேரம் இழுத்து விடுமே! என்னை விடப்பா நீ...

நவ : சரி. நீங்களே பாருங்கள். பத்து நிமிஷத் துக்கு மேலாகாது. கடிகாரத்தை வேண்டுமானலும் வைத்துக் கொள்ளுங்கள். நான் சொல்லிக்கொண்டே போகிறேன்.

நரோ : [பரிதாபமாக] நவகாந்தா! ஏனப்பா எல் லோருமாக என்னைப் பிடித்துக் கொள்கிறீர்கள்! அடுத்த அறையில் ஹரி, நவீனன் எல்லாரும் இருக்கிருர்கள். அவர்கள் பக்கம்கூட எவரும் எட்டிப் பார்ப்பதில்லையே! அன்று நீ உன் காதல் தீவிரத்தை ஆரம்பித்ததன் பலன் பகலில் பாதி நேரம் போய்விட்டது. அதற்காகத் துரை யிடம் வேண்டிய வசவு வாங்கிக் கட்டிக் கொண்டேன். இன்றும் கூடவா உன் காதல் பித்து! அப்பனே! எனக்கு

வேலை போய்விட்டால் உன் காதலின் தீவிர சக்தி எனக்குச் சோறு போடுமா!

[கிளம்புகிறான்]

நவ: [பிடித்துக்கொண்டு] உங்களுக்குக் கோபமா!

நரோ: இல்லை. கோபமென்ன! ஆபீசுக்கு நேரமாகி விட்டது. அதுதான் அவசரம்!

[கிளம்புகிறான்]

நவ: [மறுபடி பிடித்து] இல்லை. உங்களுக்கு நிச்சயம் என்மேல் கோபம்தான்.

நரோ: இதென்னப்பா சங்கடம்! குளிர் காலமல்லவா! அதனால்தான் பேச்சிலேயே பொழுது போவது தெரிவதில்லை.

[புறப்பட முயலுகிறான்]

நவ: [பிடித்து] இல்லை. நீங்கள் கோபத்துடன் போகிறீர்கள். எனக்கு நாள் முழுவதும் மனது அடித்துக் கொள்ளும்.

நரோ: இல்லை அப்பா! ஆபீசிலிருந்து வந்ததும் போகலாம்.

[கிளம்பப் பார்க்கிறான்]

நவ: [திரும்பவும் தடுத்து] இல்லை! என்னை மன்னித்து விட்டேனென்று சொல்லுங்கள்.

நரோ: மன்னித்து விட்டேன்.

[மறுபடி புறப்படப் பார்க்கிறான்]

நவ: [பிடித்துக் கொண்டு] உங்கள் முகம் மலர்ச்சியுடன் இல்லையே!

நரோ: எப்படியப்பா மலர்ச்சி இருக்கும்? நேரமாகிக் கொண்டே போகிறது!

நவ: [தடுத்து] மலர்ந்த முகத்துடன் மன்னித்து விட்டுப் போங்கள். அப்போதுதான் விடுவேன்.

நரோ: நான் உன்னை மன்னிப்பது கிடக்கட்டும். நீயே என் பிழையைப் பொறுத்துக் கொள். உன் காலில்

விழுகிறேன். காதைப் பிடித்துக் கொண்டு தோப்புக் கரணம் கூடப் போடத் தயார். நீ என்ன சொல்வதானலும் தயாராக இருக்கிறேன். ஆனல் இப்படி வேளை கெட்ட வேளையில் உன் இதய ரகசியம் மட்டும் வேண்டாமப்பா.

[போகிருன்]

நான்காம் காட்சி

[நரோத்தமன் பின்னல் கணேசன்]

கணே: ஏன் இரைக்கிறது! கொஞ்சம் உட்காரலாமே! என் கட்டுரையில்...

நரோ: மறந்தே விட்டேன். நீங்கள் சாப்பிட்டாயிற்ரு!

கணே: இல்லை. ஆனல் என் கட்டுரையில்...

நரோ: ஈ விழுந்து விட்டதே!

கணே: ஈ ஏன் விழப்போகிறது!

நரோ: உங்கள் கட்டுரையில் இல்லை. என் பால் தம்ளரில் தான் ஈ விழுந்து விட்டது என்றேன் [போகக் கிளம்புகிருர்]

[நவகாந்தன் வருகிருன்]

நவ: கோபித்துக் கொண்டு வந்தீர்களல்லவா? எனக்கு மனதே சரியாக இல்லை.

நரோ: எனக்கும்தான் மனது அடித்துக் கொள்கிறது.

[பரபரவென்று போகிருன்]

நவ: நரோத்தம பாபுவின் முக மலர்வைக் கண்டாக வேண்டும். அவரை அதுவரையில் விடக்கூடாது. [போகிருன்]

கணே: நரோத்தம பாபு எங்கே கிளம்பிவிட்டாரோ தெரியவில்லையே!

ஐந்தாம் காட்சி

[நரோத்தமன் சாப்பிட்டுக் கொண்டிருக்கும் சமயம்: கணேசன் வருகிறான்]

கணே: ஏது இவ்வளவு சீக்கிரம் சாப்பிட உட்கார்ந்தீர்கள்.

நரோ: சீக்கிரமா! ஆபிசுக்குப் போகவேண்டுமே!

கணே: இப்போதே போக வேண்டுமா! சரி. நீங்கள் சாப்பிட்டாகும் வரையிலும்...

நரோ: ஸார்! நான் சாப்பிட்டாயிற்று. இதோ எழுந்திருக்கப் போகிறேன்.

கணே: இன்னும் ஒன்றுமே சாப்பிட வில்லையே! இலையில் எல்லாம் அப்படியே கிடக்கிறது. வெற்றிலை போட்டுக் கொள்வீர்களல்லவா! அது வரையிலுமாவது...

நரோ: [மறைவில் நோக்கி] அதோ நவகாந்த பாபு முகவாட்டத்துடன் வருகிறார். எனக்கு வெற்றிலை வேண்டாம். இதோ போகிறேன். [போகிறான்]

[நவகாந்தன் வருகிறான்]

நவ: நரோத்தம பாபு எங்கே?

கணே: [தன் கட்டுரையை எடுத்தவாறு] அவர் போய்விட்டார். கிடக்கட்டும், நீங்கள் உட்காருங்கள்.

நவ: [பெருமூச்சுடன்] அப்பனே! என்கதி இப்படியாகி விட்டதே!

கணே: ஒன்றுமில்லை! கவலைப் படாதீர்கள். நீங்கள் நன்றாகத்தான் இருக்கிறீர்கள். ஹிந்து ப்ரகாசத்தில் என் கட்டுரை...

நவ: ஒன்று மில்லையா! என்ன சொன்னீர்கள்! காதலின்...

கணே: காதலுமல்ல. கத்திரிக் காயுமல்ல. ஆர்ய ஜாதியின்......

நவ: ஆரிய ஜாதி எங்கிருந்துவந்தது? காதலைப் பற்றியல்லவா நான் சொல்லிக் கொண்டிருப்பது! நான் சொல்ல வந்தது......

கணே: நான் எழுதியிருக்கும் விஷயம் நமது ஆரியப் பெரியோர்கள் ஏற்படுத்திய கட்டுப்பாடுகளை இந்தக் காலத்தில் என்ன செய்வது என்பதுதான்.

நவ: குழியை வெட்டிப் புதைக்கலாம். அது கிடக்கட்டும். காதல் தீயில் உள்ளம் சுடர் விட்டு எரிகையில்......

கணே: அது வீட்டுக் கூரையின் மேலும் விழாமல் இருக்கிறதா என்று பார்த்துக் கொள்ளவேண்டும். இல்லாவிடில் ஏதாவது லங்காதகனம் உண்டாகி விடும். என் கேள்வி சாஸ்திரங்களின் மூலாதாரம் என்ன என்பது.

நவ: மண்ணுங்கட்டி.

கணே: அதிலிருந்து என்ன பலன் உண்டாகிறது!

நவ: வாழைப்பழம்!

கணே: அந்த மூலதனத்தை மீட்பது யார்?

நவ: வராக அவதாரம்.

கணே: அந்தப்பலனை அனுபவிப்பது யார்?

நவ: ஹனுமான் அவதாரம். என்கேள்வி, உலகத்தில் எல்லாவற்றையும் விட ஆழ்ந்த ரகசியம் எது?

கணே: ஆரிய சாஸ்திரம்தான்.

நவ: காதல்.

கணே: மனுவும்...

நவ: ஊடல், கண்ணீர்...

கணே: க்ருஹ்யஸூத்ரமும்...

நவ: கடைக்கண் நோக்கும்...

கணே: தாயபாகமும்...

நவ: உள்ளமும் உயிரும் பிணைப்பதுதான்.

ஆருவது காட்சி

[கணேசன் எழுதிக் கொண்டிருக்கிருன்]

கணே: ரொம்ப ஆழ்ந்த விஷயம். "நாரதரின் உரலும், தற்கால பலூனும்" ஆரம்பம் நன்ருக அமைந்து விட்டது. ஆனல் முடிவு சரியாக வரவில்லையே! முடியாமல் போனலும் பரவாயில்லை. ஆனல் யாருக்குப் படித்துக் காட்டுவது? நரோத்தம பாபுவோ வீட்டைக் காலி செய்து விட்டார். ஹரஹர பாபுவை அணுகவோ பயமாக இருக்கிறது.

[நவகாந்தன் வருகிருன்]

நவ: என்ன செய்வது! நரேந்திரபாபு வீட்டை விட்டுப் போய்விட்டாரா! யாரிடம் போவது?

கணே: இதோ நவகாந்த பாபு! நாரதரின் உரல்...

நவ: பால் பெருகும் நிலவினிலே குன்ரு இளமை வெள்ளம்!

[ஆதிநாத பாபு வருகிருர்]

கணே: பிழைத்தேன். ஆதிநாதபாபு! என்னுடைய கட்டுரை நாரதரின் உரல்...

நவ: மலர் விழிகள் குவிந்து கண்ணுறங்கும் நேரமது!

கணே: ஸநாதன சாஸ்திரங்களை அலசிப் பிழிந்து நாரதரின் உரலை...

ஆதி: உரலென்பது நாட்டுப் புறத்துச் சொல்லைப் போல் படுகிறது. ஸாஹித்ய தர்ப்பணத்தில்—

[வேலைக்காரன் வருகிருன்]

வேலை: ஓடுங்க சாமிமார்களா! நெருப்புப் பிடிச்சிட்டுது!

ஆதி: இவனுடைய இலக்கண அறிவைக் கவனித்தீர்களா!

நவ: [பெருமூச்சுடன்] நெருப்பு! உள்ளத்தின் ஆழ்ந்த புகையில்...

கணே: நளன் ஒருவித ஏற்பாடும் இல்லாமல் நெருப்பு உண்டாக்குவானும். அது ஆக்ஸிஜன் ஹைட்ரஜன் இரண்டையும் கலந்துதான்.

ஆதி: இதில் மேல் நாட்டுச் சொல் கல்ப்பு இருக்கிறது. அதைவிட...

[அறையினுள் தீ பரவுகிறது]

13. இறுதிச் சடங்கு

முதல் காட்சி

[ராய் கிருஷ்ணகிசோர் பகதூர் மரணப் படுக்கையில் கிடக்கிறார். அவருடைய பிள்ளைகளான சந்திரகிசோர் நந்தகிசோர், இந்திரகிசோர் - மேற்கொண்டு நடக்க வேண்டியன குறித்து யோசனையில் ஆழ்ந்திருக்கின்றனர். டாக்டர் நோயாளியைக் கவனித்துக்கொண்டிருக்கிறார். சற்று ஒதுங்கி வீட்டுப்பெண்கள் மெல்ல அழுது கண்ணீர் வடிக்கின்றனர்.]

சந்திரகிசோர் : இன்னும் யார் யாருக்கு எழுத வேண்டும்?

இந்திர : ரியலுல்ட்ஸ் துரைக்கு எழுது.

கிருஷ்ண : [ஆயாசத்துடன்] என்ன எழுதுகிறீர்களப்பா?

நந்த :- உங்களுடைய மரணச் செய்தியை.

கிருஷ்ண : இன்னும் நான் சாகவில்லையே, இதற்குள்ளா?

இந்திர : இப்போது இராது போனாலும் நடக்கப் போகிற விஷயந்தானே...சமயம் வரும்போது யார் யாருக்குத் தெரியப்படுத்த வேண்டுமென்பதைக் குறித்து ஒரு முடிவுக்கு வருவது நல்லதுதானே.

சந்திர : எவ்வளவு சீக்கிரமாக முடியுமோ துரைகளிடமிருந்து கண்டோலன்ஸ் கடிதங்கள் கிடைக்கப் பெற்றால் தினசரியில் வெளியிடுவதற்கு வாய்ப்பாக இருக்கும். மரணச் செய்தியுடன் இதுவும் வரும் அல்லவா?

கிருஷ்ண : சற்றுப் பொறுங்கள் அப்பனே. அமைதியாக என்னைச் சாகவிடுங்கள்.

நந்த : பொறுத்தால் நடக்காதப்பா - சிம்லா, தார்ஜிலிங் போன்ற இடங்களுக்கு இப்போதே செய்தியைத் தெரிவித்துக் கடிதங்கள் போட்டால்தானே ...அதற்குத்தான். மேலேசொல்லு, இன்னும் யாருடைய பெயராவது விட்டுப் போயிருக்கிறதா?

சந்த : கவர்னர், ஆல்பர்ட் துரை, வில்ஸன், பெரெஸ்போர்ட் மெகாலே, பீகாக்.

கிருஷ்ண : என் செல்வங்களா, என் காதில் இந்தப் பெயர்களை ஏன் சொல்கிறீர்கள்? இதைவிட பகவானுடைய நாமத்தைச் சொல்லுங்கள். எனது கடைசி மூச்சு அதனால் நிம்மதியாகப் பிரியும். ஏ ஹரி—

இந்திர : அப்பா ஞாபகப்படுத்தினரே, ஹாரிஸன் துரையைச் சேர்த்துக்கொள்.

கிருஷ்ண:என் காதில் ராம நாமத்தை உச்சரியுங்கள்.

நந்த : அப்படியே, ராம்ரீஸதுரையை மறந்தோமே.

கிருஷ்ண : நாராயண நாராயண.

சந்திர : நந்து குறித்துக்கொள். நோரான் துரையின் பெயரை.

[ஸ்கந்தகிசோர் வருகிறன்]

ஸ்கந்த : ரொம்ப நல்லவர்கள் தாம் நீங்கள். முக்கியமாகச் செய்ய வேண்டிய காரியம் அப்படியே காத்துக் கொண்டிருக்கிறது.

சந்திர : என்னடா சொல்லேன்?

ஸ்கந்த : மயானத்துக்குப் போகும் போது இந்த ஊர்வலத்தில் யார் யார் கலந்து கொள்ள வேண்டும் என்பதற்கு இன்னும் ஓர் ஏற்பாடும் ஆகவில்லையே?

கிருஷ்ண : அப்பன்மாரே! எது முன், எது பின். என்று தெரியவில்லையே. என்னுடைய சாவா, அல்லது அதற்கான சடங்கா?

ஸ்கந்த : அப்பா! அதைப்பற்றி உமக்கு ஏன் கவலே. [டாக்டரைப் பார்த்து] டாக்டர்! இன்னும் எத்தனை மணி காலம் போகும். சாதாரணனை [வெளியூரில் இருக்கும் மற்றொரு மகன்] வரவழைத்துவிடலாமா?

டாக்டர் : அப்படித்தான் எனக்கும் தோன்றுகிறது.

[பெண்களின் அழுகைக் குரல்]

ஸ்கந்த : [எரிச்சலுடன்] அம்மா! என்ன வீட்டை இப்படிக் கலக்கி விடுகிறீர்களே — டாக்டர்! இன்னும் ரொம்ப நாழிகை செல்லுமா?

டாக்டர் : இன்று இரவுக்குள் முடிந்துவிடலாம்.

[மீண்டும் பெண்களின் அழு குரல்]

நந்த : அடாடா! இப்படி ஓலமிட்டால் வேலே செய்யவே எங்களுக்குக் கைகால் ஆடவில்லே. எதற்காக இப்படிக் கதறுகிறீர்கள்? அழுதால் மட்டும் போகிற பிராணன் திரும்பிவிடுமா? பெரிய பெரிய துரைகள் கண்ணீர் விட்டு எழுதும் கடிதங்களேப் பத்திரிகைகளில் பிரசுரம் செய்ய வேண்டும். நீங்கள் எல்லாம் உள்ளே போய்த் தொலேயுங்களேன். எங்கள் காரியத்தைக் கெடுக்காதீர்கள்.

[பெண்கள் போகின்றனர்]

ஸ்கந்த : டாக்டர், இப்போது எப்படி இருக்கு நாடி?

டாக்டர் : அதே மாதிரிதான் ஓடுகிறது. ராத்திரி ஆகும்?

சந்திர : அப்படியானல் நமக்குப் பொழுதே இல்லே. நந்து ஓடு ஓடு, செய்தியை உடனேயே அச்சில் ஏற்றச் சொல்லு.

டாக்டர் : அதற்கு முன்னல் நான் எழுதிக் கொடுத்த மருந்தை...

ஸ்கந்த : சும்மா இரும் டாக்டர். டிஸ்பென்ஸரி அதற்குள் மூடிவிட்டாரா என்ன ? 'ப்ரெஸ்' [பத்திரிகை அச்சகம்] நின்றுவிட்டால் பெரிய கஷ்டமாகிவிடுமே...

டாக்டர் : அதற்குள் நோயாளி—

சந்திர : அதற்குத்தான் இத்தனைப்பாடும்—செய்தி பத்தியில் ஏறுவதற்கு முன்பே நோயாளி போவது நல்லதுதானே .

நந்த : இதோ போகிறேன்.

ஸ்கந்த : இருடா, செய்தியில் இந்த வரியையும் சேர்த்துக் கொள் — நாளை காலை சரியாக மணி எட்டுக்கு பிரேத் ஊர்வலம் புறப்படும்.

இரண்டாம் காட்சி

ஸ்கந்த : என்ன டாக்டர், இரவெல்லாம் போய் மணி ஏழும் அடித்தாகிவிட்டது?

டாக்டர் : [திடுக்குற்று] அதுதான், நாடி இன்னும் பலமாகத்தான் இருக்கிறது.

சந்திர : என்ன டாக்டர் நீங்கள் ? பெரிய சங்கடத்தில் மாட்டிவிட்டீரே...உங்களை நம்பித்தானே...

நந்த : மருந்து வாங்கிவரச் சற்றுத் தாமதமானதால்தான் இந்தக் கஷ்டம். டாக்டர் மருந்து நின்றதும் அப்பாவுக்கு உடம்பில் பலம் வந்துவிட்டது.

கிருஷ்ண : இதுவரை, நிரம்பத் தென்பாக இருந்தீர்களே, திடுமென்று ஏன் இந்த முகவாட்டம், உடம்பு சற்றுத் தேவலை போலவே எனக்குத் தோன்றுகிறது.

ஸ்கந்த : எங்கள் காரியந்தான் கெடும்போலிருக்கு. இதனால் மயானத்துக்குப் போகவேண்டிய ஏற்பாடெல்லாம் செய்துவிட்டோம். இப்போது திடுமென்று நீங்கள்...

கிருஷ்ண . என் செல்வங்களா, அப்படியானால் நான் சாவதே மேல். ஆனால் அந்த வேளை நெருங்கவில்லையே !

டாக்டர் : எனக்கு ஒரு யோசனை தோன்றுகிறது. இத்தனை தொந்தரவுக்கே இடமிராது போகும்.

இந்திர : என்ன சொல்லும்.

ஸ்கந்த : சொல்லித் தொலையும் ?

சந்திர : என்னவோ ?

நந்த : என்ன தான் அது சொல்லு ?

டாக்டர் : அவருக்குப் பதிலாக உங்களில் யாராவது குறிப்பிட்ட தருணம் உயிரை விட்டு விடுங்கள்.

மூன்றும் காட்சி

[வெளியறையிலும் வாசலிலும் ஒரே ஜனசந்தடி. கிருஷ்ண கிசோரின் பிரேத ஊர்வலத்தைக் காண திரண்ட மக்கள் யாவரும்.]

காளுயி : என்னடா மணி எட்டும் அடித்தாயிற்று. இன்னும் கிளம்பவில்லையே...எதனால் இந்தத் தாமதம்?

சந்திர : சற்று இருங்கள். உங்களுக்கெல்லாம் சிரமம் கொடுத்து விட்டோம்...ஹுக்காவில் இரண்டு 'தம்' புகை குடியுங்கள்.

காளுயி : எங்கே, கொண்டு வைத்தால்தானே ...

சந்திரா : இதோ சடுதியில் வரும்...எங்களால் ஒரு தடங்கலும் இல்லை.

ராமதாரண் : என்னப்பா சந்துரு. இப்படி நாழிகை ஆக்கினல் முடியாது.

சந்திர : எனக்குந்தான் புரியவில்லை.

ஹிரிஹர் : எதனுல் இந்தத் தாமதம். நாங்கள் சட்பட்டென அவரைக் கொண்டு சேர்த்துவிட்டு எங்கள் அலுவலைக் கவனிக்கப் போக வேண்டாமா? எத்தனை நாழிகை இப்படி நிற்பது?

[இந்திர கிசோர் வருகிறன்]

இந்திர : பதற்றம் வேண்டாம். கொஞ்சம் பொறுங்கள். இதோ முடிந்து விட்டது. கண்டோலன்ஸ் கடிதங்கள் ஏராளமாக வந்து குவிந்து இருக்கின்றன. அவற்றை

யெல்லாம் படித்து முடிப்பதற்குள்—இது லாம்பர்ட் எழுதியது. ஹாரிஸன் துரை கதறி இருக்கிறார்—ஸர் ஜேம்ஸின் அனுதாபக் கடிதத்தில் அப்பாவை நினைத்துக் கொண்டு அழுத கண்ணீர் கொட்டி எழுத்தைக் கூட மறைத்திருக்கிறது பாரும்!

[ஸ்கந்த கிசோர் வருகிறான்]

ஸகந்த : பத்திரிகையிலும் வெளியாகி விட்டது. அப்பாவின் மரணச் செய்திக்கு ஒரு தனிப்பத்தியே விட்டிருக்கிறார்கள். இதோ 'ஸ்டேட்ஸ்மன்' இதோ 'இங்க்லிஷ்மான்' படியுங்கள்.

மதுசூதன் : [யாதவனை விளித்து] பார்த்தாயப்பா, இந்தியன் 'பங்க்சுயாலிடி' என்பார்களே அதே போலத் தான் இதுவும்.

இந்திர : சொன்னது சரிதான். 'பங்க்சுயலாக' மரணந்தான் வரவில்லை.

[வேறு சிலர், கிருஷ்ண கிசோர் மாண்ட செய்தி கேட்டுத் தம் துயரைத் தெரிவித்துக் கொள்ள அவர் வீட்டுக்கு வருகின்றனர்]

ராதாமோகன் : [கண்களில் நீர் துளும்ப] ஹரி, ஏ, தீனபந்தோ... இப்படியும் ஆகுமோ? எப்பேர்ப்பட்ட மனுஷ்யன்.

நயான்சாந்த் : ஐயோ, இதென்ன அநியாயம். நல்லவர்களாகப் பார்த்து யமன் கொண்டு போகிறானே. இது அடுக்காது.

நவதுவீபன் : [பெருமூச்சுடன்] உம். எல்லாம் அவனுடைய திருவிளையாடல். அவன் இச்சை!

ரசிகன் : [கையறு நிலையாக] இதயக் காம்பில் இதழ் விரித்த எனது இன்மலரே உதயக் கதிரவனெனத் திகழ்ந்த உத்தமரே! அந்தோ! இத்தகையவரை இழந்தோம் இன்று.

ஆட்டி எஸ்கெவியர்: O tempora O moses [நிலையில்லாதது வாழ்க்கை. மரணமே உன் மகிமைதான் என்ன! 'இன்றுள்ளார் நாளை இல்லை என்ற பெருமை உடைத்து இவ்வுலகு']

தருக்கவாதீசர்: சலச்சித்தம், சலத்வித்தம், சலத் ஜீவனம். ஹா ஷ்கட, ஹா கஷ்ட. [மனம், செல்வம், வாழ்வு. இம்மூன்றும் நிலையற்றவை. ஐயோ கஷ்டமே!]

சாகித்ய ரத்தினர்: நனிபேதையே, நயன்இல் கூற்றுவ, இவனைக் கொண்டனை ஆயின், இனியார் மற்று நின் பசி தீர்ப்போரே ?

[இதைக் கூறும்போது அவருக்கு நெஞ்சை அடைக்கிறது

[உள் அறையில் கிருஷ்ண கிசோரின் பலவீனமான குரல் கேட்கிறது.]

[ஐயோ, நான் இன்னும் சாகவில்லையே. அப்பன்மாரே—இதற்குள் ஏன் இந்த ஓலம்! என்னை அமைதியாக சாக விடமாட்டீர்களா?']

14. ரஸிகன்

[தீன்கடி, நேபால், போலா, நீலமணி நால்வரும் சிரித்துக் கொண்டே வருகிறார்கள். தீராஜ் வருகிறான்]

தீராஜ்: எதற்கு அப்படிச் சிரிக்கிறீர்கள்? பைத்தியமா என்ன!

தீன்கடி: [தொலைவில் சுட்டி] அதோ பாருங்கள். ரஸிகராஜ் பாபு வருகிறார்.

தீராஜ்: அது தெரிகிறது! ஆனால் சிரிக்கும்படியாக எதையும் காணோமே!

நேபால்: அவர் ரொம்ப வேடிக்கையான பேர்வழி.

போலா: ரொம்ப வேடிக்கையான ஆள்.

நீலமணி: ஆமாமாம். ரொ...ம்...ப...வே...டிக்கையான மனுஷன்.

தீன்கடி: அவருடைய கதை, ஒன்று சொல்லுகிறேன். கேளுங்கள். அன்று நாங்கள் சில பேர் சிரித்துக் கொண்டே ரசிக பாபுவுடன் வந்தோம். சோராபாகான் திருப்பத்திலே—ஹா! ஹா! ஹா!

நீலமணி: ஹோ! ஹோ! ஹோ!

போலா: ஹீ! ஹீ! ஹீ!

தீன்கடி: புரிகிறதா! சோராபாகா...ஹா! ஹா!

நேபால்: இருடா! துணியைச் சரியாகக் கட்டிக் கொள்கிறேன். சிரிப்பிலே தாறுமாறாய் அவிழ்ந்து விட்டது.

தீன்கடி: புரிகிறதா தீராஜ் பாபு! நாங்கள் அந்தத் திருப்பத்தில் வரும்போது...என்னவென்று! சொல்வது ரொம்ப வேடிக்கை!

தீராஜ்: சரி, அப்புறமாகச் சொல்லு. நான் போகிறேன்.

போலா: இல்லை இல்லை. கேட்டு விட்டுப் போங்கள். அது ரொம்ப வேடிக்கையாக இருக்கும். சொல்லேண்டா. கதையை முடி.

தீன்கடி: புரிகிறதா தீராஜ் பாபு! திருப்பத்தில் ஒரு மாட்டு வண்டிக்காரன் .. ஹாஹ்ஹா! [போலாவை நோக்கி] என்னடா எடுத்துக் கொண்டு போனான்?

போலா: சீமைக் கரி.

தீன்கடி: ஆமாம். சீமைக் கரிதான். ரஸிக்பாபு அதைப்பார்த்து... ஹாஹ்ஹா! [எல்லாரும் சிரிக்கிறார்கள்] ரஸிக்பாபு அதைப் பார்த்து... [நேபாலை நோக்கி] என்ன சொன்னாரடா?

நேபாலன்: ஹாஹ்ஹா? அது ரொம்ப வேடிக்கை! போலாவை நோக்கி] ஆனால் என்ன சொன்னாரடா? நீ சொல்லு.

போலா: நினைவில்லை. ஆனால் அது ரொம்ப வேடிக்கை. புரிகிறதா திராஜ் பாபு! ரொம்ப வேடிக்கை!

நீலமணி: கொஞ்சம் கொஞ்சம் நினைவிருக்கிறது. சீமைக்கரி விஷயமாக என்னவோ சொன்னார்...

நேபாள், போடா போ! சீமைக்கரியைப் பற்றிச் சொல்ல என்ன இருக்கிறது! அவசியம் நம் நாட்டுச் சகோதரிகளைக் குறித்து என்னவோ சொன்னார். அதைத் தவிர அவர் வேறு எதுவுமே சொல்லவில்லை.

(எல்லோரும் சேர்ந்து சிரிக்கிறார்கள்)

[ரஸிக்ராஜ் வருகிறார்]

ரஸிக்: என்னடா! இங்கு நகை* இப்படி இறைபடுகிறது!

நீலமணி: நகைதானே! ஹாஹ்ஹா!

---

* சிரிப்பு

தீன்கடி : [தீராஜை நோக்கி] இதைக் கேட்டீர்களா! நகை...ஹாஹ்ஹா!

போலா : தீராஜ்பாபு! கேட்டீர்களா! எவ்வளவு அழகு! நகை; அதுவும் இறைபடுகிறது.

நீலமணி : தீராஜ்பாபு!

தீராஜ் : எனக்குப் புரிகிறது.

நேபாளன் : தீராஜ்பாபு!

தீராஜ் : ஏன் கஷ்டப்படுகிறீர்கள்? எனக்கு ஒரு வாறு புரிந்து விட்டது.

ரஸிக் : செகோதரிகள் விஷயம் ஏதாவது புதிதாகத் தெரிந்ததா!

நீலமணி முதலானோர் : ஹிஹ்ஹி, ஹாஹிஹா, ஹோஹ்ஹோ.

தீராஜ் : செகோதரிகள் என்ருல் என்ன!

தீன்கடி : மற்றவர்கள் சகோதரி என்ருல் ரஸிக்பாபு செகோதரி என்பார். ஹாஹ்ஹா!

திராஜ் : பாவம், அவருக்கு வங்க மொழி சரியாக வராதாக்கும்!

தீன்கடி : வேடிக்கை புரியவில்லையா? எல்லாரும் சகோதரி என்ருல், அவர் மட்டும் செகோதரி என்பார்.

ரஸிகன் : புரிகிறதா போலா! இன்று ஒரு தமாஷா நடந்தது. செகோதரிகள் சபையில் அங்கத்தினரும் சபைக் குளவியும்...

தின்கடி முதலானோர் : ஹோஹ்ஹோ ஹீஹ்ஹீ!

[தாமோதர், சிந்தாமணி வருகிருர்கள்]

இருவரும் : என்னப்பா! என்ன என்ன! விஷயம்!

தீன்கடி : ரஸிக்பாபு சொன்ஞர். "செகோதரிகள் சபை அங்கத்தினரும் சபைக் குளவியும்...ஹாஹ்ஹா!

தாமோதர் : இது வேடிக்கையான விஷயமாயிற்றே! இதை நீங்கள் நிச்சயமாக எழுத வேண்டும். எங்கள் பத்திரிகையில் எழுதுங்கள்.

சிந்தா : ரஸிக்பாபு ! இதை எழுதி விடுங்கள்.

தின்கடி : திராஜ்பாபு ! புரிகிறதா ?

போலா : குளவி என்று ஏன் சொன்னூர், புரிகிறதா! செகோதரிக்கு ஏற்றுற் போலக் குளவி ! ஹாஹ்ஹா !

நேபாளன் : இதில் இருக்கும் தமாஷ் புரிய வில்லையா தீராஜ்பாபு ! சரியான சொல் தலைவி. ஆனல் ரஸிக்பாபு—

திராஜ் : போதுமப்பா ! இதற்குமேல் எனக்குப் புரியவைக்க வேண்டியதில்லை.

போலா : எந்தப் பெரிய மனுஷ்யரைப் பற்றிச் சொல்லுகிருர் என்பது திராஜ் பாபுவுக்குத் தெரியவில்லை. அதனுல்தான் அவர் சிரிக்கவில்லை.

திராஜ் : புரிந்து விட்டது என்றுதான் நான் சிரிக்க வில்லை. நானும் பெரிய மனுஷ்யன் தானே ! எனக்கும் தான் மனைவி, தங்கைகள் இருக்கிருர்கள் !

ரஸிக் : நீங்கள் சொன்னல் அவசியம் எழுத வேண்டியதுதான். ஆனல் இதெல்லாம் சண்ட முண்ட வதம் பற்றின கூத்து, ஒரேயடியாக ஸரிகமபதனிதான் ! தரிகிட கிரிகிட என்றுதான் சொல்ல வேண்டும் ! குதிரை யைத் தள்ளிப் புல் தின்னப்போன கதை என்றே வைத் துக் கொள்ளுங்களேன், புரிகிறதா !

எல்லோரும் : புரியாமல் என்ன ! ஹாஹ்ஹா !

தீன்கடி : புரிகிறதா தின்ராஜ்பாபு !

தீராஜ் : ஒன்றும் புரியவில்லை.

நேபாள் : திராஜ்பாபு ! உங்களுக்குப் புரிந்ததோ !

திராஜ் : இல்லையப்பா ! என்னென்னவோ சொல்லிக் கொண்டே போனதில், ஒன்றுமே விளங்கவில்லை.

தின்கடி : சொன்னது புரியாவிட்டால் போகிறது. அதில் வேடிக்கை இருக்கிறது பாருங்களேன். விஷயம் எங்களுக்குக் கூடத்தான் புரியவில்லை.

தாமோதர் : ரஸிக்பாபு ! இதைக்கூட நீங்கள் எழுத வேண்டும்.

ரஸிக் : [தீராஜை நோக்கி] முகத்தில் சிரிப்பைக் காணேமே ! சிரித்தால் ஏதாவது போய்விடுமோ !

தீராஜ் : கோபித்துக் கொள்ளாதீர்கள். சிரிக்கத் தான் முயன்று பார்க்கிறேன்.

சிந்தா : ஒருவேளை செகோதரர்களில் நீங்கள் ஒருவரோ ?

ரஸிக் : செகோதரராகவும் இருக்கலாம். இல்லை வீட்டுக்காரராகவும் இருக்கலாம்.

தாமோதர் முதலானோர் : [கை தட்டலுடன்] ஆஹாஹா ! என்ன வேடிக்கை ! ஹாஹ்ஹா !...

தாமோதர் : இதைக்கூட எழுதுங்கள். ரொம்ப வேடிக்கையான வார்த்தை !

நீலமணி : [தீராஜைப் பிடித்துக்கொண்டு] எங்கே போகிறீர்கள் ?

தீராஜ் : மார்பில் டர்பன்டைன் [Turpentine] தடவிக் கொள்ள வேண்டும். ரஸிக்பாபு ரொம்பவும் சொல்லி விட்டார்.

[போகிருன்]

சிந்தா : ஆள் அடங்கி விட்டான். சொன்ன ஐந்து பேச்சுக்களை அவன் அப்பன் வயதுக்கும்...

ரஸிக் : ஐந்து பேச்சா ! அவ்வளவுக்கு ஏது ! இரண்டரை கூடச் சொல்லவில்லை...

[ரஸிகனைச் சூழ்ந்து கொண்டு
எல்லோரும் ஓயாமல் சிரிக்கிருர்கள்]

தாமோதர் : இரண்டுமில்லை, பத்துமில்லை. இரண்டரை ! எவ்வளவு முத்தான வார்த்தை ! அதையும் எழுதுங்கள். குறித்து வையுங்கள். புரிகிறதா, ரஸிக் பாபு.

15. குரு வாக்கியம்

[அச்சுதன், அபூர்வன், உமேசன்,
கார்த்திகேயன், ககேந்திரன் ஆகிய ஐவர்]

அச்சுதன் : குரு தேவரைக் காணவில்லையே இன்னும்! என்ன செய்வது?

கார்த் : என்பாடு கூடச் சங்கடமாகி விட்டது. என் பேர் கார்த்திகேயன். என் மைத்துனன் பேர் கீர்த்தி. என் ஸம்ஸாரம் தன் தம்பியைக் கீர்த்தி என்று கூப்பிடலாமா என்று தெரிந்தாலொழிய அவளுடன் குடித்தனம் நடத்துவதே பெரும்பாடாக இருக்கிறது. போதாத குறைக்குப் பால்காரப் பையன்–பேரும் கீர்த்தி வாஸன். அவனை என் ஸம்ஸாரம் வாஸு என்று கூப்பிட்டால் பரவாயில்லையா! குருதேவரை இது பற்றிக் கேட்டேயாக வேண்டும். வீட்டில் கார்த்திகை பூஜையின் போது நாத்திகளுக்கி விடுகிருள் என் பெண்டாட்டி. பெயரை இப்படிச் சிதைத்து விட்டதால் அந்தக் கடவுளுக்கோ அவருடைய தாய்க்கோ ஏதாவது கோபம் உண்டாகுமோ என்றும் தெரிய வேண்டும்.

அபூர் : எனக்கும்கூட ஒரு சந்தேகம். போன தடவை ஸ்ரீக்ஷேத்ரம் போனபோது வெள்ளரிக் காயை விட்டு விட்டேன். இந்த வெயில் காலத்தில் வெள்ளரியைத் தின்னுமல் அதன் ரஸத்தை மட்டும் சாப்பிடலாமா, அதனுல் ஏதாவது குற்றமா என்று தெரிய வேண்டும்.

அச்சுதன் : அன்று நான் கேட்டேனே, சாஸ்திரப்படி அன்னம் உயர்ந்ததா அல்லது அதை உண்பவனு! சாப்பாடு சிறந்ததா அல்லது சாப்பிடுபவன் உயர்ந்

தவனு என்று. அதற்கு அவர் சொன்ன பதில் எவ்வளவு தெளிவாகத் தண்ணீர்போல் விளங்கி விட்டது! ஆனல் இப்போதோ அதில் ஓர் எழுத்துகூட நினைவில்லை.

உமேசன் : எனக்கு நினைவு வந்த மட்டில், அன்னமும் சிறந்ததல்ல; அதை உண்பவனும் உயர்ந்தவனல்ல என்றுதான் அவர் சொன்னதாகப் படுகிறது. ஆனல் இன்னும் ஏதோ ஒன்று உயர்வானது என்ருரே, அதுதான் இன்னதென்று நினைவு வரவில்லை.

அபூ : இல்லையப்பா. அன்னமும் சரி, அதை உண்பவனும் சரி, இரண்டுமே மேலானவைதான் என்று அவர் சொன்ஞர். ஆனல் அன்னம் எதனல் மேலானது; அதை உண்பவன் எவ்விதத்தில் உயர்வானவன் என்பது அப்போது விளங்கியது. ஆனல் இப்போது எவ்வளவு யோசித்தும் நினைவு வரவில்லை.

கணேன் : அன்னம், அதை உண்பவன் இவர்களின் உயர்வைப் பற்றி நான் முன்பு ஒருவிதமாக எண்ணியிருந்தேன். குருதேவர் சொன்னதைக் கேட்டதும் எனக்கு விஷயம் புரியவில்லை என்று தெரிந்தது. இப்போதோ சொன்னதும் கூடப் புரியாமல் போய் விட்டது.

[வதன சந்திரன் ஓடி வருகிருன்]

வதன : [இரைக்க இரைக்க] குருதேவர் எங்கே? நம் சிரோமணிகள் எங்கேயப்பா? சொல்லுங்களேன்.

மற்றவர் : ஏனப்பா? என்ன விசேஷமா?

வதன : திடுமென்று நேற்று ராத்திரி என் மனசில் ஒரு சந்தேகம் கிளம்பி விட்டது. அது முதல் சோறு தண்ணீர் செல்லவில்லை. போயேன்.

மற்ற: அப்படியா? என்ன சந்தேகம் அது?

வதன : என்னவா! நேற்று கொசு வலையை உதறும்போது ஒரு சந்தேகம் பிறந்தது. ஏகப்பட்ட இடம் இருக்கும்போது ஜடாயு ராவணனுடன் சண்டை போட்டுச் சாக வேண்டியது ஏன்! அப்படிச் சண்டை போட்டுச்

செத்ததன் கருத்து என்ன! காரணமென்ன! உட்பொருள்தான் என்னவாக இருக்கும்! ஏதாவது ரகசியமான உள்பொருள் இருக்குமோ! அப்படியானல் அது தான் எது?

கார்த்: கஷ்டமான கேள்விதான். சிரோமணிதான் வர வேண்டும்.

ககேன்: என்னுல் தெளிவாகச் சொல்ல முடியாது. இருந்தாலும் சண்டையில் ராவணன் ஜடாயுவை பயங்கரமான ஆயுதத்திஞல் தாக்கி யிருப்பான்; அதனுல்தான் ஜடாயு சாக நேர்ந்தது என்று எனக்குத் தோன்றுகிறது.

வதன: அடராமா! இதுவும் ஒரு பதிலா. இது எல்லாருக்கும் தெரிந்ததுதானே!

கார்: இதை நான்கூடத்தான் சொல்லி விடலாம்.

அபூ: இந்த மாதிரி பதிலால் மனம் திருப்தி அடையுமா?

[வதனன் யோசனையில் ஆழ்கிருன்.
ககேனின் முகத்தில் அசடு தட்டுகிறது]

அச்சுதன்: [பரபரப்புடன்] அதோ குருதேவர் வருகிருர்!

உமேசன்: அதோ சிரோமணிகள்.

வதன: [சட்டென்று சிந்தனை கலைந்து] என்ன குருதேவர் வருகிருரா! பிழைத்தேன். இப்போதே பாதி சந்தேகம் தீர்ந்தது.

[சிரோமணி வருகிருர். எல்லோரும்
தரையில் விழுந்து வணங்குகிருர்கள்]

சிரோ: மங்களம் உண்டாகட்டும்!

வதன: குருதேவா! நேற்றுக் கொசு வலையை உதறும்போது ஒரு சந்தேகம் எழுந்தது.

சிரோ: தெளிவாகச் சொல்.

வதன: புள்ளரசன் ஜடாயு ராவணனுடன் சண்டை யிட்டுச் சாகக் காரணம் என்ன? [கணேசனைச் சுட்டி] நமது ககேந்திரபாபு [ககேன் முகம் கூசிக் குனிகிருன்] ஆயுதம் தாக்கியதால் சாக நேர்ந்தது என்கிருர்.

சிரோ: அப்படியா! ஹாஹா! இந்தக் காலத்துக் காலேஜ் மாணவன் போலத்தான் இருக்கிறது அவர் பதில். சாஸ்திர பாடங்களை விட்டு விஞ்ஞானம் படித்த தன் பலன் இது. ஜடாயு சாகக் காரணம் என்ன என் ருல், ஆயுதம் தாக்கினதுதான் காரணம் என்று பதில். இது எப்படி இருக்கிறது தெரியுமோ! காசியில் மழை பெய்ததால் கட்தாறில் வெட்டுக்கிளிகள் பயிரை அழித் தன என்பது போலத்தான். ஹா: ஹா: ஹா:!

அபூ: ஆம் குருதேவா! அபபடித்தான் இருக்கிறது. இப்போதெல்லாம் இந்த மாதிரிதான் ஆகி விட்டது.

சிரோ: ஏனப்பா ககேன்! நீ எத்தனையோ பரீக்ஷைகள் தேறியவன். நீயே சொல்லு. ஆயுதம் தாக்குண்டுதான் ஜடாயு ஏன் சாக வேண்டும்! ரத்த சோகைப் பிடித்துச் சாகக் கூடாதா! ராவணனுடன் தான் சண்டையிட வேண்டுமென்று என்ன! பத்மாஸுர னுடன் சண்டை வந்திருக்கக் கூடாதா? அதெல்லாம் எதற்கு! ஜடாயுதான் சாக வேண்டுமா! ராவணன் செத்துப் போயிருக்கலாமே! அதனுல் என்ன குறைந்து போகும்!

[வதனன் முன்பு இருந்ததைவிட
அதிகமான சிந்தனையில் ஆழ்கிருன்]

அச்சுதன், அபூர்வன்: [ஆழ்ந்த சிந்தனையுடன்] ஆமாம். உண்மைதான். இவ்வளவு இடம் இருக்கும் போது ஜடாயுதானு சாக வேண்டும்?

உமே: என்ன, ககேன்! பதில் சொல்லேன் உன் ராஸ்கோ துரை என்ன சொல்லுகிருர்?

கார்த்தி : உங்கள் டிண்டால் துரை என்ன சொல்லு கிறரோ? ராவணனுடன்தான் சண்டை உண்டாக வேண்டுமென்று என்ன!

அச்ச : ரத்த சோகையில் சாகாமல் ஆயுதம் தீண் டிச் சாவானேன்! அதற்கு என்ன அப்படித் தலைவலி! உன் ஹக்ஸ்லி துரை என்ன சொல்லுகிருர்? சொல்லேன்.

கணேன்: [பாதி உயிர் போனவன் போல்] குரு தேவா! நான் மூடன். ஏதோ தெரியாமல் உளறி விட் டேன். மன்னித்தருள வேண்டும். தங்கள் திருவாக்கில் என்ன பதில் வருமோ என்று ஆவலுடன் காத்திருக் கிறேன்.

சிரோ : ராவணனுடன் சண்டையில் ஜடாயு சாகக் காரணமென்ன என்பதுதானே கேள்வி! இதற்கு ஒரே வார்த்தையில் எவ்வாறு பதில் சொல்வது?

எல்லோ : உண்மைதான். உண்மைதான்.

சிரோ : முதலாவதாக ராவணனுடன்தான் சண்டை வர வேண்டும் என்று என்ன என்பதைக் கவனிக்க வேண்டும். அப்புறம் சண்டைதான் ஏன் கிளம்ப வேண் டும் என்று கவனிக்கலாம். பிறகு அந்தச் சண்டையில் ஜடாயுதான் சாக வேண்டுமென்பது என்ன! கடைசியாக அந்தப் போரில் ஜடாயு சாக வேண்டி யிருந்த அவசியம் என்ன என்று யோசிக்கலாம்.

வதனன் மீண்டும் சிந்தனைக்
கடலில் மூழ்குகிருன்]

அச்சு : [கணேசனைத் தட்டி] கேட்டீர்களா, கணேன் பாபு!

அபூர் : என்ன கணேன் பாபு! பேச்ச மூச்சையே காணுமே!

கார்த் : என்ன! உங்கள் கெமிஸ்ட்ரி என்ன சொல்லுகிறதோ?

[கணேனின் முகம் சிவக்கிறது]

சிரோ : இப்போது ஒவ்வொன்ருகப் பதில் சொல்கிறேன். நியதி ஏன் பாதிக்கிறது?...என்பதுதான் முதல் கேள்விக்குப் பதில் !

வதனள் : [பெருமூச்சுடன்] அப்பாடா! உயிர் வந்தது! இதைவிட வேறு என்ன பதில் இருக்கமுடியும்!

சிரோ : விதியை எவ்வாறு தடுக்க முடியும் என்று கேட்டால் அதற்கும் பதில் இருக்கிறது! நடப்பது நடந்து தீரும். என்பது விதியின் கொள்கை. அதன்படி எல்லாம் நடக்கும் என்பதும் அதன் தீர்ப்பு. ஆகவே எவ்வளவோ காலமாக ஓயாது இயங்கி வரும் இதற்கு எதிராக இன்னென்று நடக்க வழியேதும் இல்லை. ஏனென்ருல் நடப்பது நடக்கத்தான் வேண்டும். அதுவே நடத்தியும் காட்டுகிறது. ஆகவே ஜடாயு ராவணனுடன்தான் சண்டை செய்தாக வேண்டும். இதில் வியப்பென்ன!

எல் : இதில் ஆச்சரியப்பட என்ன இருக்கிறது.

வதன : ஆமாம். இதில் சந்தேகப்பட என்ன இருக்கிறது ?

சிரோ : இரண்டாவது கேள்விக்குப் பதில்...

வதன : இத்துடன் போதும். முதலில் இதை நன்ருக ஜீரணித்த பிறகு மேலே போகலாம்.

அச்சு : நல்ல மணியான பதில்.

அபூர் : எவ்வளவு எளிய முறையில் சொன்ஞர் பார்த்தாயா!

கார்த் : மிகவும் தெளிவாகப் புரிந்தது.

உமேச : அவருடைய சாஸ்திர அறிவுதான் என்னவென்கிருய் !

வதன : [கிரோமணியின் முகத்தை நோக்கி] குருதேவா! தாங்கள் இல்லாவிட்டால் எங்கள் கதி என்ன ஆகுமோ !

[எல்லோரும் கண்களைத்
துடைத்துக் கொள்கிருர்கள்]



Tamil Translation of
the Bengali Title
HASYA ·KAUTHUK

By:

RABINDRANATH TAGORE

இந்த நாடகங்கள்

படிக்கப் படிக்கச் சிந்தனையைத் தூண்டும் பதினைந்து குட்டி நாடகங்கள் இத்தொகுப்பில் உள்ளன. உலகப் பெருங் கவிஞருள் ஒருவராகிய தாகுர் நகைச் சுவை ததும்ப எழுதுவதிலும் திறமை மிக்கவர் என்பதற்கு இப் புத்தகம் ஓர் எடுத்துக் காட்டு. படிப்பதற்கும், நடிப்பதற்கும் மிகவும் ஏற்ற நாடகங்கள்.

தென் மொழிகள் புத்தக டிரஸ்டின்
ஆதரவில் பதிப்பிக்கப் பெற்றது.

GENERAL PRINTERS, PERIAMET, MADRAS-3.